வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 06 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 215 பக்கங்கள் : 16

MARUTHI MONEY EXCHANGE

மாருதி

Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# கல்விச் சீர்திருத்தங்களுக்கு வடக்கு முழுமையான ஆதரவு

## பிரதமரிடம் கூறினார் மாகாண ஆளுநர்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 03

**"வடக்கு மாகாணத்தில், அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம். எங்கள் திறமையான இளைஞர்கள், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் மற்றும் எங்கள் மக்களின் உறுதியுடன், இலங்கையின் கல்விக்கான புதிய அத்தியாயத்தில் வடக்கு மாகாணம் ஒரு வெற்றியின் முன்மாதிரியாக இருக்கும் என நம்புகின்றேன்."**



- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பிலான மாகாணமட்டக் கலந்துரையாடல் பிரதமரும் கல்வி, உயர்கல்வி, தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஆளுநர், நாட்டின் பெருமைமிகுந்த மற்றும் மீள்தன்மை கொண்ட எங்கள் பிராந்தியத்துக்கு உங்களை வரவேற்கின்றேன். தேசிய ஒற்றுமை, சம வாய்ப்பு மற்றும் எந்த மாணவனும், 15

# ஒழுங்கையில் உறங்கியவர் டிப்பரில் நசுங்கி உயிரிழப்பு!

- குமார கோகுலன் -

வவுனியா, ஓக. 03

வவுனியா நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் ஒழுங்கையில் நித்திரை கொண்ட நபர் ஒருவர், டிப்பரில் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டு ஒழுங்கையில் நேற்று முன் தினம் இரவு படுத்துறங்கிய இளைஞனை கவனிக்காத டிப்பர் வாகனத்தைச் செலுத்தி வந்த மைத்துனர், வீடொன்றில் சல்லிக் கற்களை இறக்கி விட்டு வாகனத்தை 15

# இலங்கை அகதிகளுக்கு கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மறுபரிசீலனைக்கு

சென்னை, ஓக. 03

இந்தியாவில் பிறந்து நாடற்றவர் என்ற நிலையில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு இந்திய கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்யுமாறு சென்னை மேல் நீதிமன்றத்தின் மதுரை கிளை, மத்திய அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

தனது விண்ணப்பத்தை பரிசீலித்து இந்திய கடவுச்சீட்டை வழங்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி 2024 இல், இலங்கை அகதி ஒருவர் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரணை செய்தபோதே, நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# புதிய கல்விச் சீர்திருத்தத்தை கூட்டாக நிறைவேற்றவேண்டும்

## பிரதமர் ஹரிணி யாழில் கோரிக்கை

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 03

புதிய கல்வி சீர்திருத்தம் கல்வி அமைச்சின் அல்லது ஜனாதிபதி அநுரவின் அல்லது பிரதமர் ஹரிணியின் சீர்திருத்தம் அல்ல, மாறாக அனைவரின் புரிதல், யோசனைகள் மற்றும் பரிந்துரை களுடன் நேர்மறையான மாற்றங்களைச் செய்வ தன் மூலம் குழந்தைகளுக்கு கூட்டாக நிறை வேற்றப்படவேண்டிய ஒரு பொறுப்பு என்று கல்வி, உயர்கல்வி மற்றும் 15



# சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் திங்கள், செவ்வாய் ஸ்கான் சோதனை

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 03

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் ஸ்கான் பரிசோதனைகள் வருகின்ற திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் முன்னெடுக்கப்பட உள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

நேற்று செம்மணியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

5ஆம் திகதி பொது மக்களுக்கு காண்பிக்கப்பட உள்ள சான்று பொருட்கள் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளது அலுவலகம் தமது கரிசனையை தெரிவித்துள்ளது. குறுகிய நேரத்தில் சான்றுப் பொருட்களை அடையாளம் காண்பது தொடர்பாக சில கருத்துக்களை முன்வத்துள்ளது.

அதன்படி நீதிமன்றம் சில கட்டளைகளை நேற்று 15

# நீதிவான் திலின கமகே இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 03

மொரட்டுவை நீதிவானாக பணியாற்றிய திலின கமகேவின் பணிகளை இடைநிறுத்த நீதிசேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவருக்கு எதிரான தவறான நடத்தை குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்பட்ட விசாரணையையடுத்து, இந்த இடைநீக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த குற்றச்சாட்டு குறித்து 21 நாட்களுக்குள் பதிலளிக்குமாறு கோரி ஆணைக்குழு நேற்று முன்தினம் எழுத்து பூர்வமாக 15

# தமிழ்த் தேசிய பேரவை தயாரித்த ஆவணத்தில் தமிழரசு ஒப்பமிடாது!

## நேற்று அறிவித்தார் சுமந்திரன்

யாழ்ப்பாணம்,ஓக. 03

"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்ப என்ற பெயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட்ட தமிழ்த் தேசியப் பேரவை தயாரித்த ஆவணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒப்பமிடாது."

தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனா திபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் முடிவை நேற்று அறிவித்தார்.

இலங்கைத் 15

# அரியாலை சான்றுப் பொருள்கள் 5ஆம் திகதியன்று காட்சிப்படுத்தல்

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்ப்பாணம், அரியாலை மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட 54 சான்றுப் பொருட்களை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அடையாளம் காண உதவும் வகையில் 5ஆம் திகதி காட்சிப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 15

# பயங்கரவாதச் சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வர எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 03

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக புதிய சட்டத்தைக் கொண்டுவரும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தமிழரசுக் கட்சி எதிர்த்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். 15

# அரியாலையில் மீட்கப்பட்ட தடயங்களை அடையாளம் காட்ட ஒத்துழைக்கவேண்டும்

## பொதுமக்களிடம் சிறீதரன் எம்.பி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 03

அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழியின் அகழ்வுப்பணிகளில் இதுவரை மீட்கப்பட்டுள்ள தடயப்பொருட்கள் பொது மக்களால் அடையாளப் படுத்தப் படுமாக இருந்தால், அவற்றை அடிப்படையாகக் கொண்டு உண்மைகளைக் கண்டறிவ தற்கான விசாரணைகளைக் கோர முடியும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் முடிந்து 17 வருடங்கள் கடந்தும் வடக்கு மக்கள் வாழ்க்கை மாறவில்லை



கிளிநொச்சி, ஓக. 03

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வடக்கு மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பளை பிரதேசத்திலுள்ள பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு நேற்று முன்தினம் சென்ற அமைச்சர், அங்கு அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கிலிருந்து வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அதற்குரிய பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தென்னை பயிர்ச்செய்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடக்கில் இவ்வருடத்தில் 16 ஆயிரம் ஏக்கர் காணியில் தென்னை பயிர்ச்செய்கைக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது காணிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காகவே இப்படியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வறுமை ஒழிப்பு என்பது எமது கொள்கைகளின் பிரதான விடயமாகும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போரால் அனைத்தையும் இழந்துள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும்.

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வாழ்க்கையில் மாற்றம் இல்லை. வறுமையை ஒழிக்காமல் நாட்டின் அபிவிருத்தி பற்றி சிந்திக்க முடியாது" - என்றார். (எ)

# வடக்கு மாகாண தென்னை முக்கோண வலய கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 03

வடக்கு மாகாண தென்னை முக்கோண வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வுக்கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயல்திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், தென்னை பயிர்ச்செய்கையாளர்கள் சந்திக்கும் பிரச்னைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாண தென்னை முக்கோண வலயம் என்ற திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்கு கால் ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரையான காணிகளுக்கு தென்னை பயிர்கள் மானியமாக வழங்கப்படுகின்றது. அத்துடன் இதற்கான நீர்விநியோக செயல்பாடுகளுக்காக ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர்களான சுந்தரலிங்கம் பிரதீப், உபாலி சமரசிங்க, மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர, அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (எ-10)

# நல்லை ஆதீனத்தில் இன்று தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 03

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் ஜூலை 29 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நடைபெறவுள்ளது.

அந்தவகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆறுகால் மடம் ஐயப்பன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் சைவப் புலவர் கந்த. சத்தியதாசன் வழங்கும் "கதாப்பிரசங்கம்" நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலத்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

# சுன்னாகத்தில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 03

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சபாபதிப் பிள்ளை வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

தனியாகச் சென்ற ஒருவர் மீது, ஓட்டோவில் வந்த மூவர் அடங்கிய குழுவினர் இந்த வாள்வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்த நிலையில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இது குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மேலதிக வகுப்புகளுக்கு தடை!

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 03

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை செய்யப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த தடையை மீறும் ஆசிரியர்கள், பாடசாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,787 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சுற்றுலா வந்த பிக்கு மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 03

சுற்றுலா வந்த பிக்கு ஒருவர் யாழ்ப்பாணம் நாகவிகாரை விடுதியில் இரவு உறக்கத்துக்கு சென்ற நிலையில் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டார். பதுளை, பசறை பகுதியைச் சேர்ந்த வனபதுலே சரணஹற தேரர் (வயது- 72) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (எ-05)

# தெய்வீக திருக்கூட்டத் தொடர் ஆறாம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 03

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் ஆறாம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், சிறீ சிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க,

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியச் செயலாளர் சிவசிறீ சோ. கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் தெற்கு சிறீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் தவறஞ்சினி பொன்னம்பலமும் இடைக்காடு மகா வித்தியாலய ஆசிரியர் பிரம்மசிறீ சோ. குகதாசசர்மாவும் சமூக, சமய சேவையாளர் திருமதி இராமஜெயம் விஜய லட்சுமியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலை நிகழ்வுகளை யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் அறநெறிப் பாடசாலை, நல்லூர் தெற்கு, கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை, கொழும்புத்துறை அம்பலவாணர் அறநெறிப் பாடசாலை, கொழும்புத்துறை, சந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்ப்பாணப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. விஜிதா வழங்கவுள்ளார்.

சிறப்புக் கலை நிகழ்வாக வனஸ்ஜினி சிறீகரசர்மாவின் தனி நடன நிகழ்வும் நல்லூர் அநுராகம் கவின்கலை நிலையத்தின் குழு இசை நிகழ்வும் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, நன்றியுரையை கொழும்புத்துறை, வதிரிபீட விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி ச. சஞ்சிகா வழங்கவுள்ளார். (எ)

# அனுமதியின்றி குழாய்க் கிணறு அமைத்தால் சட்ட நடவடிக்கை

## வேலணை பிரதேச சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 03

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் முறையான அனுமதி பெறாது குழாய்க் கிணறுகள் அமைப்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் நடைமுறைகளை மீறி செயல்படுபவர்களுக்கு எதிராக மட்டுமல்லாது இயந்திரங்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வேலணை பிரதேச சபை அறிவித்துள்ளது.

இது குறித்து பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமாரின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபைக் குட்பட்ட இடங்களில் அண்மைக்காலமாக எந்தவிதமான அனுமதியும் பெறப்படாது அதிகளவான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் அமைக்கப்படும் குழாய்க்கிணறுகளை எந்தவிதமான கட்டுப்பாடுகள் மற்றும் போதிய வழிகாட்டுதல்களுமின்றி தான்தோன்றித்தனமாக அமைப்பதானது எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற மிக சொற்பமான நன்னீர்க் கிணறுகளையும் வெகுவிரைவில் பாதிப்படையச் செய்யும் ஒரு செயல்பாடாகவே இருக்கின்றது.

இதனால் குறித்த செயலபாட்டை விரைந்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இதடிப்படையில் குழாய்க் கிணறுகளை அமைக்க உத்தேசித்துள்ளவர்கள் பிரதேச சபையின் ஊடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு விண்ணப்பித்து அவர்களது சிபார்சிற்கு அமைவாக பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமான தாகும்.

அத்துடன் உடனடியாக செயல்படும் வண்ணம் இந்த நடைமுறை இறுக்கமாக பின்பற்றப்படும் என்பதோடு அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேநேரம் குழாய்க் கிணறு அமைக்கும் சேவை வழங்குநர்கள் தங்களது சேவை வழங்கல் தொடர்பில் பிரதேச சபையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு உரிமப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நிறுவன உட்கட்டமைப்பு வசதிகள் கிராமங்களுக்கும் செல்ல வேண்டும்

## டிஜிற்றல் பரிவர்த்தனைகள் குறித்து மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்

தம்புள்ளை, ஒக. 03

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் டிஜிற்றல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பது போல, கிராமங்களில் உள்ள மக்களுக்கு பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளை எடுத்துச் செல்ல வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட டிஜிற்றல் பரிவர்த்தனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை மையப்படுத்தி மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"டிஜிற்றல் பரிவர்த்தனைகளில் குறிப்பாக நமது நாட்டில் பணம் செலுத்துதல் மற்றும் தீர்வுகளுக்கு பெரும்பாலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கடந்த காலங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இணையவழி வங்கிச் சேவை, கியூ. ஆர். ஆகியவற்றை பயன்படுத்தி செலுத்தி வந்த நிலையில், தற்போது அரசாங்கத்தின் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை கோபே ஊடாகவும் செலுத்த முடிகிறது. இதே முறையில் வரி செலுத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதன் பயன்பாடு மிகக்குறைவு. குறிப்பாக மேல் மாகாணத்துக்கு வெளியே செல்லும்போது, பெரும்பாலானவர்கள் இன்னும் நாணயத்தாள்களை கொண்டே பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதைத்தான் அவர்கள் எளிது என நினைக்கின்றனர். ஆனால், நீங்கள் உண்மையிலேயே யோசித்துப் பார்த்தால், ஒரு வர்த்தகர் மற்றும் நுகர்வோருக்கு, இந்தப் பணத்தைப் பயன்படுத்துவது உண்மையில் கூடுதல் நேரத்தை கடத்துகிறது. குறிப்பாக டிஜிற்றல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வங்கி அமைப்பு மற்றும் நிதி நிறுவனங்கள் சிறப்புப் பங்காற்றுகின்றன. இது போன்ற இடங்களுக்கு வந்து அதை ஊக்குவிப்பதைத் தவிர, இது கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் இதில் நம்பிக்கை ஏற்படும். இதன் மூலமாக வரி பிரச்னையில் சிக்கிக்கொள்வோம் என்ற தேவையற்ற பயம் உள்ளது. அப்படி எதுவும் இல்லை. வரி பிரச்னையில் சிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால் பணத்தை எவ்வாறு கையாண்டாலும் அதில் சிக்கிக் கொள்வீர்கள்"- என்றார். (எ)



# ஊடகவியலாளர் நிலக்சனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக. 03

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் யாழ். மாணவர் பேரவையின் தலைவருமான சகாதேவன் நிலக்சனின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அந்தக் கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது நிலக்சனின் திருவுருவ படத்துக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 22 பேர் கடற்படையினரால் கைது

மன்னார், ஒக. 03

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 22 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள், வெடிபொருட்கள், டைவிங் உபகரணங்கள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 22 நபர்களுடன் 5 டிங்கி படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையினர், பொலிஸார் மற்றும் மீன்வளம் மற்றும் நீர்வளத் துறை ஆகியவை ஜூலை 23 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நாட்டின் கடல் எல்லைகளை உள்ளடக்கியதாக இந்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 210 தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளுடன் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டார்.

திருகோணமலையின் கோட்பே, கும்புறுப்பிட்டி, கிண்ணியா, மூதூர் மற்றும் மன்னாரின் கக்கரதீவு ஆகிய கடற்கரை மற்றும் கடல் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

# பொலிஸ் பாதுகாப்புடன் சபை அமர்வுக்கு வந்த உறுப்பினர்

வவுனியா, ஒக. 03

பொலிஸ் பாதுகாப்புடன் சிறைச்சாலை வாகனத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை அமர்வுக்கு உறுப்பினர் ஒருவர் அழைத்து வரப்பட்டார்.

சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினரே இவ்வாறு அழைத்து வரப்பட்டார்.

கடந்த 11 ஆம் திகதி வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற அமைதியின்மை காரணமாக 5 பொலிஸார் காயமடைந்தனர். பொலிஸாரின் இரு மோட்டார் சைக்கிள்கள், கப் ரக வாகனம் ஒன்றும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில 7 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குழப்பம் ஏற்பட்ட பகுதியில் மக்களுடன் நின்ற தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் வாக்கு மூலம் பெறுவதற்காக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட நிலையில் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் அவர் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சபை அமர்வுக்காக நீதிமன்ற அனுமதி பெற்று பொலிஸார் மற்றும் சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் சிறைச்சாலை வாகனத்தில் அமர்வுக்காக அழைத்து வரப்பட்டு அமர்வில கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார். அமர்வு முடிந்ததும் மீண்டும் அதே வாகனத்தில் அழைத்து சென்று சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ-10)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

குருநாகல், ஒக. 03

குருநாகலில் மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இலுகேவல பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை பிற்பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவத்தகம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இலுகேவல பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட போர் 12 ரக துப்பாக்கி மற்றும் 4 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெருகல் பூநகர் பகுதியில் கவனவீர்ப்பு போராட்டம்



திருகோணமலை, ஒக. 03

திருகோணமலை - வெருகல் பூநகர் பகுதியில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் நேற்றுச் சனிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் பதாகைகளை ஏந்தி அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புகள், மத சுதந்திர மீறல்கள், ஏனைய வன்முறைகள் இடம்பெறாமல் இருப்பதாக இருந்தால் வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் குறித்த தரப்பினரால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# முட்டைகளை கழுவிய பின் சேமித்து வைத்தால் ஆபத்து

கொழும்பு, ஒக. 03

முட்டைகளை கழுவிய பின்னர் சேமித்து வைப்பது நுகர்வுக்கு தீங்கு விளைவிக்கும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டைகளைக் கழுவுவதன் ஊடாக முட்டையின் மேற்பரப்பில் உள்ள கிருமிகள் முட்டைக்குள் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் புலின ரணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"முட்டை ஓடு என்பது முழுமையாக மூடப்பட்ட ஒன்றல்ல. இது மிக நுண்ணிய துளைகளைக் கொண்டுள்ளது. எனவே, முட்டைகளைக் கழுவும்போது, மேற்பரப்பில் உள்ள அழுக்கு, தூசி மற்றும் விலங்குகளின் மலம் தண்ணீரில் கரைந்து முட்டையின் உள்ளே செல்லும்.

முட்டையின் உள்ளே புரதம் நிறைந்துள்ளது. நுண்ணுயிரிகள் அதில் நுழைந்தால், அவை விரைவாக வளர்ந்து நச்சு நிலைமைகளை ஏற்படுத்தும். எனவே, கழுவிய பின் முட்டைகளை சேமிக்க முடியாது.

இதன் பொருள் முட்டைகளை சமைக்கும்போது கழுவ வேண்டும் என்பதல்ல.

கழுவிய முட்டைகள் சந்தையில் பொதி செய்யப்படுவதில்லை என்று நினைக்கிறேன். முட்டை உற்பத்தி செயல்முறையின் போது அழுக்கு, தூசி, மாசுபடுவதைக் கட்டுப்படுத்த நல்ல தரமான முகாமைத்துவ முறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் உள்ளன.

உலகில் சாதாரணமாக முட்டைகளை சுத்தப்படுத்தும் செயல்பாடுகளை இயந்திரங்களின் ஊடாகவே மேற்கொள்வது வழக்கம். அவைகள் கழுவி சுத்தப்படுத்தப்படுவதில்லை"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மகிந்தவை மெதமுல்லவுக்கு அனுப்பும் சட்டமூலம் என்று பெயர் வைக்கலாம்"



கொழும்பு, ஓக. 03

**அரசியல் கலாசாரத்தை புறக்கணித்து விட்டு முன்னாள் ஜனாதிபதிகளை பழிவாங்கும் நோக்கத்தில் முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்தை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மாத்திரம் இலக்காக் கொண்டு அவரை கொழும்பிலிருந்து வெளியேற்றி மெதமுல்லவுக்கு கொண்டு செல்வதற்காகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.**

மகிந்தவை மெதமுல்லவுக்கு அனுப்பி வைக்கும் சட்டமூலம் என்று இதற்கு பெயர் வைத்திருக்கலாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் ஊடகப் பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுன வின் அலுவலகத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சு கடந்த வியாழக்கிழமை 1896 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துச் சட்டத்தை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்திருந்தது. முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு சலுகைளை இரத்துச் செய்வதை இந்த சட்டமூலம் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

நாட்டு மக்கள் பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்கு இந்த அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளமை கவலைக்குரியது. முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்களுக்கு உரிய சிறப்புரிமைகளை வழங்குவது அரசியல் கலாசாரத்தின் ஒருபகுதியாகும். உலக நாடுகளும் இந்த வழக்கினை பின்பற்றுகின்றன - என்றார். (எ)

# கல்கிசையில் பயங்கரம் இளைஞன் படுகொலை!

கொழும்பு, ஓக. 03

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரலிய வீட்டு வசதிப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 28 வயது இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் லுனாவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகவும் கல்கிசை பொலிஸார் கூறினர்.

இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் இளைஞன் உயிரிழந்ததாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையைச் செய்த சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்ற அவர்களைக் கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜை சிக்கினார்

## ஐஸ் போதைப்பொருள் பறிமுதல்

கொழும்பு, ஓக. 03

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் பம்பலப்பிட்டி பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான வெளிநாட்டுப் பிரஜை 50 கிராம் 450 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 37 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரான வெளிநாட்டுப் பிரஜை செல்லுபடியாகும் விசா இன்றி சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சுகாதார ஒழுங்குமுறை நடவடிக்கை; பாவனைக்கு உதவாத மீன்கள் அழிப்பு

திருகோணமலை, ஓக. 02

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகர சபை எல்லைக்குட்பட்ட ஏ - 15 பிரதான வீதியில் உள்ள மீன் சந்தையில் சுகாதாரத்துக்கு கேடான மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்தன.

இதையடுத்து, கடந்த 31 ஆம் திகதி கிண்ணியா நகர சபைத் தவிசாளர் மஹ்தி தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் திடீர் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, பாவனைக்கு உதவாத பெரிய தொகை மீன்கள் கண்டறியப்பட்டு நகர சபைத் தவிசாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

இவ்வாறான பாவனைக்கு உதவாத மீன்கள் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு ஆபத்தாக இருக்கக்கூடியதால், இது போன்ற மீன்களை எதிர்காலத்தில் விற்பனை செய்வோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீன் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-01)

# நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி, மகசின் மீட்பு

மட்டக்களப்பு, ஓக. 03

மட்டக்களப்பு நகர் பிரதேசத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி- 56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள், மகசின் என்பனவற்றை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினர் மீட்டு ஒப்படைத்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தெரிவித்தார்.

லயன்ஸ் கிளப் வீதியில் உள்ள காணி ஒன்றில் புதிதாக வீடு கட்டுமானப்பணி இடம்பெற்று வருகின்ற நிலையில் வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் மலசல கூடத்துக்குக்கு குழி அமைக்க நிலத்தை தோண்டும் போது பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் துப்பாக்கி இருப்பதை கண்டு விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றையும் 50 ரவைகள், 2 மகசின்களையும் மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திடீரென சுகவீனமுற்று மாணவி உயிரிழந்தார்

அநுராதபுரம், ஓக. 03

அநுராதபுரம் - கெக்கிராவை பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் திடீரென சுகவீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக கெக்கிராவை பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை முடிந்து வீடு திரும்புவதற்காக பாடசாலை பேருந்துக்காக வீதியோரம் காத்திருந்த மாணவி திடீரென சுகவீனமுற்று மயக்கமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மயக்கமடைந்த மாணவியை பாடசாலை குழுவினர் இணைந்து பாடசாலை பேருந்து மூலம் கெக்கிராவை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இருப்பினும் மாணவி உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

6 ஆம் தரத்தில் கல்வி கற்ற 11 வயதுடைய சிகிரியாவை சேர்ந்த மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

மாணவியின் மரணம் குறித்து தடயவியல் வைத்திய பரிசோதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

# கேகாலை - அவிசாவளை வீதியில் நேற்று பேருந்து கவிழ்ந்து விபத்து

கேகாலை, ஓக. 03

கேகாலை - அவிசாவளை வீதியின் தெஹியோவிட்ட, தெம்பிலியான பகுதியில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுஅதிகாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.



விபத்தின் போது பேருந்தில் 42 பேர் பயணித்ததாகவும், இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக அவிசாவளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெரணியகலையிலிருந்து அவிசாவளை கைத்தொழில் பேட்டைக்கு பயணித்த பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரியவந்துள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து தெஹியோவிட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேருந்து கட்டணங்களில் மாற்றமில்லை!

கொழும்பு, ஓக. 03

ஓகஸ்ட் மாதத்துக்கான பேருந்து கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லை என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், ஓகஸ்ட் மாதத்துக்கான எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது. எனவே, பேருந்து கட்டணங்களிலும் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாது - என்றும் அவர் கூறினார். (எ)

# யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 03

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவடி நெல்லிக்காட்டில் நேற்று அதிகாலை 01. 30 மணியளவில் யானை தாக்கியதில் 4 பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

நெல்லிக்காட்டு கிராமத்துக்குள் நேற்று முன்தினம் நள்ளிரவு புகுந்த யானை வீட்டின் முன்பகுதியில் வைத்து மாணிக்கம் இராமலிங்கம் என்பவரை தாக்கியது.

படுகாயமடைந்தவரை களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.08.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆடி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உலகை உற்று நோக்கப் பழகுங்கள்

சர்வதேச விசாரணை - என்னும் சொற்பிரயோகம் கடந்த பதினாறு வருடங்களாக உச்சரிக்கப்பட்டுவருகின்றது. அரசியல்வாதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என, இதனை உச்சரிக் காதவர்கள் இல்லை. ஆனாலும் இந்த விடயத்தில் ஒரு சிறு முன்னேற் றமும் ஏற்படவில்லை - ஏன் என்று கேட்டால் எவரிடமும் பதிலில்லை.

இது தொடர்பில் 'ஈழநாடு' பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக் கின்றது. இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை சுட்டிக் காட்டியிருக் கின்றது. ஆனாலும் இதனை உச்சரிப்பவர்கள் கோரிக்கைகளுக்கு அப்பால் என்ன செய்தனர் என்று தங்களை கேட்பதில்லை ஆகக் குறைந்தது ஏன் தங்களின் கோரிக்கையை யாரும் பொருட்படுத்த வில்லை என்றும் சிந்திப்பதில்லை.

தமிழர் பக்கத்திலிருந்து நீதிக்கான கோரிக்கைகள் முன்வைக் கப்படுகின்றபோது இலங்கைக்கு உதவுவதை எவராவது கைவிட்ட னரா? தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இராஜதந்திர அணுகுமுறை யில் திருப்தியடைந்துதானே அமெரிக்கா வரிக் குறைப்பை மேற்கொண் டிருக்கின்றது. மனித உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தை வெளி விவகார நிலைப்பாடாகக் கொண்டிருக்கும் நாடுகளில் அமெரிக்காவே முதன்மையானது. ஏன் உங்களின் குரல்கள் அமெரிக்க காதுகளுக்கு கேட்கவில்லை. அடுத்தது, ஐரோப்பிய ஒன்றியம், உங்களின் கோரிக்கை களை கருத்தில் கொண்டு ஏன் ஐரோப்பிய ஒன்றியம் எந்தவொரு கடுமையான நிலைப்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை.

இதற்கான காரணத்தை இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள முயற்சிக்க வேண்டும். தொடர்ந்தும் கோரிக்கைகளில் சுகம் காண்பதற்கு பதிலாக, கோரிக்கைகளை நோக்கி மற்றவர்களை திருப்பு வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தியுங்கள்.

நீங்கள் கோரிக்கைகளை முன்வைத்துக் கொண்டே இருக்கின்றீர்கள் ஆனால் உங்கள் கோரிக்கைகளை எவருமே பொருட்படுத்தவில்லை என்றால் பிரச்னை வெளியில் இல்லை. மாறாக உங்கள் பக்கத்தில்தான் இருக்கின்றது. ஒன்றில் உங்களை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை அல்லது அவர்கள் கருத்தில் கொள்ளத்தக்க வகையில் நீங்கள் சரியாக செயல்படவில்லை.

அடிப்படையான விடயம் உங்களுடைய கோரிக்கைக்கு பின்னால் தமிழ் மக்கள் இல்லை. அவர்களுக்கும் உங்களுடைய அரசியல் சுலோ கங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாதவாறான அரசியல் சூழலே காணப்படுகின்றது. ஒரு கோரிக்கையை முன்வைத்துவிட்டு அதற்காக சிலர் வீதிகள் 'காட்போட்டு'களுடன் நின்றால் உலகம் உங்களை திருப்பிப் பார்த்துவிடுமா? இன்று பலஸ்தீனத்திற்கு ஆதரவாக லட்சக்கணக் கானவர்கள் மேற்குலக வீதிகளில் நிற்கின்றனர். அமெரிக்க பல்க லைக்கழகங்களை முடக்குமளவிற்கு அணிதிரள்கின்றனர். ஆனாலும், காஸாவில் யுத்தத்தை நிறுத்த முடியவில்லை. லட்சக்கணக்கானவர்கள் அவர்களது தலைநகரங்களில் கூடி, ஆதரவு வெளிப்படுத்தப்படும் போது கூட, மேற்குலக அரசுகளால் ஒன்றும் செய்ய முயற்சிக்கவில்லை. இப் போதுதான் கொஞ்சம் அசைவுகளை காண்பிக்கின்றன.

இந்த நிலையில் நீங்கள் ஓர் அறிக்கையை வெளியிடுவதாலும், சிலர் கூடி தையிட்டி விகாரைக்கு முன்னால் நிற்பதாலும், சில சுலோகங்களை உச்சரித்து சத்தங்களை எழுப்புவதாலும் அந்த நாடுகள் உங்களை நோக்கி திரும்பும் என்று நீங்கள் நம்பினால், ஒன்றில் நீங்கள் அரசியல் அப்பாவிகளாக இருக்கவேண்டும் அல்லது தெரிந்தே மக்களை ஏமாற்றுப வர்களாக இருக்க வேண்டும். எனவே கோரிக்கைகளை வைப்பதற்கு பதிலாக உங்களை திரும்பிப்பார்க்க என்ன செய்ய வேண்டும் என்று சிந்தியுங்கள். முடியாது என்றால் இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு வாய்ப்புக்களுக்காக காத்திருங்கள்.

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு முயற்சி!

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 02

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம் பெறவுள்ள நிலையில் இலங் கைக்கு அழுத்தம் பிரயோகிக் கும் நாடுகளை திருப்திப் படுத்துவதற்காகவா முப் படைகளின் முன்னாள் அதி காரிகள் கைது செய்யப்படுகி றார்கள் என்ற சந்தேகம் காணப்படுகிறது. செம்மணி மனிதப் புதைகுழி விவகா ரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகே தென்ன கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் குறிப் பிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறு கையில்-

முப்படைகளின் அதிகாரி கள் மற்றும் முப்படையினர் சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்பட்டிருந் தால் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என் பதில் எவ்வித மாற்றுக்கருத் தும் கிடையாது.

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய் யப்படும்போது அவர்களை சிறைச்சாலையில் ஏனைய கைதிகளுடன் ஒன்றாக அடைக்காமல், வீட்டுக் காவலில் வைக்க முடியும். ஆனால் கைது செய்யப் பட்ட கடற்படையின் முன்னாள் தளபதி ஏனைய கைதிகளுடன் ஒன்றாக சிறைக்கூண்டில் அடைக் கப்பட்டுள்ளார்.

கடத்தி காணாமலாக்கப் பட்ட விவகாரத்தில் தான் கடற்படையின் முன்னாள் தளபதி சந்தேகத்தின் அடிப் படையில் கைது செய் யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம் பெறவுள்ள நிலையில் இலங் கைக்கு அழுத்தம் பிரயோகிக் கும் நாடுகளை திருப்திப் படுத்துவதற்காகவா முப்ப டைகளின் முன்னாள் அதி காரிகள் கைது செய்யப்படு கிறார்கள் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

செம்மணி மனித புதை குழி விவகாரத்தை இரா ணுவத்தின் மீது சுமத்துவ தற்கு ஒருதரப்பினர் முயற் சிக்கிறார்கள். விடுதலை புலி கள் அமைப்பினர் சித்திர வதை முகாம்களை நடத்தி னர். விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைவதற்கு இணக்கம் தெரிவிக்காத தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணி பகுதி யில் புதைக்கப்பட்டிருக்க லாம் - என்றார். (அ)

# மன்னார் பேருந்தில் ஏறி கத்தி முனையில் ஒருவரை கடத்தி சென்ற வன்முறை கும்பல்

மன்னார், ஒக. 02

மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசார ணைக்காக சென்று மீண்டும் தனியார் பேருந்தில் வீடு திரும்பிய நபர் ஒருவரை மன் னார் - தலைமன்னார் பிரதான வீதி காட்டாஸ்பத் திரி பகுதியில் வைத்து கூரிய ஆயுதங்களுடன் கடத்திச் சென்று தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

குறித்த கடத்தல் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பான காணொளியும் வெளியாகி உள்ளது.

குறித்த சம்பவம் தொடர் பாக மேலும் தெரிய வரு கையில்-

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றிற் காக முன்னிலையானார்.

வழக்கு விசாரணை முடி வடைந்த நிலையில் அன்று மாலை மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி தனி யார் பேருந்தில் பயணித்துள் ளார்.


இதன் போது மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, காட்டாஸ்பத்திரி பகுதியில் குறித்த பேருந்தை வழிமறித்த ஒரு குழுவினர், பேருந்தில் ஏறி ஆயுதங்களி னால் பயணிகளை அச்சு றுத்தி, குறித்த நபரை தாக்கி பேருந்தில் இருந்து இறக்கி மோட்டார் சைக்கிளில் கத்தி முனையில் கடத்தி சென்றுள் ளனர்.

பின்னர் குறித்த நபரை நடுக்குடா காட்டுப்பகுதிக் குள் அழைத்துச் சென்று கடுமையாக தாக்கிய பின் விடுத்ததாகவும் கூறப்படுகி றது.

சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள் ளனர்.

(அ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை பாதுகாப்போம்!

பி.ஜெயச்சந்திரன்



‘இயற்கையின் அழகை நன்கு உணர்ந்ததற்கும், அதன் அழகான பரிமாணங்களின் சமய உணர்வுகளைக் கண்டதற்கும் நம் முன்னோர்களை நான் மனதார தலை வணங்குகிறேன்”- என்று மகாத்மா காந்தி கூறியுள்ளனர்.

இயற்கை என்பது பொதுவாக இயற்கையாக நிகழும் எல்லாவற்றையும் குறிக்கும்.

இது உயிரினங்கள், உயிரற்ற பொருள்கள், அவற்றின் செயல்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியது. சுருக்கமாக இயற்கையானது மனிதனால் உருவாக்கப்படாத அனைத்தும் ஆகும்.

இயற்கை நமக்குக் கிடைத்த வரம் அள்ள, அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் இயற்கைக்கு மனிதனைப் போன்று சுயநலமில்லை. அனைத்திலும் பொதுநலம் பார்க்கும் இயற்கையானது நமக்கு தூய காற்றையும், நீரையும் வழங்குவதோடு, உணவு, உடை, உறைவிடத்துக்குத் தேவையான அத்தனை மூலப்பொருள்களையும் வழங்கி நம்மை வாழ்விக்கிறது.

பண்டைய நம்முன்னோர் இயற்கையோடு ஒத்திசைந்த வாழ்வையே மேற்கொண்டு இருந்தனர். இயற்கையையும், அதன் படைப்புகளையும் வழிபடுதல் என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிப்படையாக இருந்தது. காலம் மாற, மாற நாம் இயற்கை வளங்களை, அதன் நீடித்த இருப்பைப் பற்றிக் கவலைப்படாமல் சூறையாடி வருகிறோம்.

பிரபஞ்சத்தில் எண்ணற்ற கிரகங்கள் இருந்தாலும் மனிதனும், மற்ற உயிரினங்களும் வாழ்வதற்குத் தேவையான இயற்கை வளங்கள் நிறைந்தது பூமி மட்டுமே.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ச்சி பெற்றிருக்கும் இந்த நேரத்தில், நமது தேவைகளுக்காக இயற்கை வளங்களை அழிப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த இனிய பூமி அனைத்து உயிர்களும் நலமுடன் வாழ உகந்த இயற்கையான சூழல் அமைப்பு கொண்டு விளங்குகிறது. தன்னைத் தானே சமநிலை செய்துகொள்ளும் இயற்கையின் ஒழுங்கமைவை மனித இனம் இப்போது குலைத்து புவியை வருங்காலங்களில் உயிர் வாழ்வதற்கு தகுதியற்றதாக செய்து வருகிறது. இது குறித்த விழிப்புணர்வைத் தோற்றுவித்து சூழலைக் காக்க வேண்டியது தற்போதைய அவசரத் தேவை.

உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் இயற்கைத் தருகிறது. காடுகள், நுண்ணுயிரிகள், ஆறு, ஏரி, கடற்பகுதிகள், மண் வளம், மேகங்கள் ஏன் ஒவ்வொரு மழைத்துளியும்கூட, இயற்கையின் கொடைதான். இதில் ஒன்றை இழந்துகூட மனிதர்கள் வாழவே முடியாது. சூறாவளி மற்றும் மழை நீரால் ஏற்படும் மண் அரிப்புகளைத் தடுப்பதில் மரங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. மரங்களை நட்டு பராமரிப்பதன்மூலம் மண் அரிப்பை முழுமையாக தடுத்து விடலாம்.

சுற்றுச்சூழலைப் பராமரிப்பதற்கும், மரங்கள் அவசியம். பறவைகள், பூச்சி இனங்கள் உள்ளிட்டவற்றுக்கு புகலிடமாக மரங்களும், செடிகளும்தான் விளங்குகின்றன. வனவிலங்குகளின் வாழ்விடமாகவும், அவற்றின் பாதுகாப்பு இடமாகவும் காடுகள் விளங்குகின்றன.

மனித நினைவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே, மனித இனத்துக்கு காடுகளின் முக்கியத்துவம் குறித்த அங்கீகாரம் இருந்துவந்துள்ளது. மரக்கட்டை, உண்ணக்கூடிய பொருள்கள், எரிபொருளாக விறகு, மூலிகைத் தாவரங்கள் ஆகியவற்றுக்கான ஆதாரமாக காடுகள் பார்க்கப்படுவதோடு, வனவிலங்குகளின் வசிப்பிடமாகவும் காடுகள் உள்ளன.

வன வளம் என்பது மரங்களின் அடர்த்தியான வளர்ச்சி, மற்ற தாவரங்களுடன் சேர்ந்து, ஒரு பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கியது. பசுமைப் போர்வைபோல, பூமியை மூடியிருக்கும் இந்தக் காடுகள் எண்ணற்ற பொருள்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பல சுற்றுச்சூழல் சேவைகளையும் வழங்குகின்றன.

உலகளாவிய வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாறுதல் ஆகியவற்றால், தற்போது மனித வாழ்க்கைக்கு நிச்சயமான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. உலகின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையும், இருப்பிடங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. சூழலியலைப் பாதுகாத்தல், பருவ நிலை மாற்றத்தைத் தடுத்தல் ஆகியவற்றுக்கான அபரிமிதமான சவால்கள் கடினமானவையாக உள்ளன. நமது நடத்தை முறையிலும், சிந்தனை முறையிலும் அவை மாற்றத்தைக் கோருகின்றன.

தண்ணீரின் தரத்தை அளவிடும்போது, அதில் அனுமதிக்கப்படும் சில அளவுகளைத் தாண்டி மாசுக்களின் நிலை எவ்வளவு உள்ளது என்று பார்க்கப்படுகிறது. நமது தலைமுறையிலும், எதிர்காலத் தலைமுறையிலும் மிக முக்கியமான பிரச்னையாக தண்ணீர் பற்றாக்குறையானது உள்ளது. பருவ நிலை மாற்றம், மரங்கள் வெட்டப்படுவது, மாசு அடைதல், மற்றும் தண்ணீரைச் சரியான முறையில் பயன்படுத்தாமல் வீணாக்குதல் ஆகியவற்றின் விளைவுதான் தண்ணீர் பற்றாக்குறை.

மலை உச்சிகளிலும், மலை ஏற்றப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் சாலை விரிவாக்கப் பணிகள் போன்றவை தீவிரமான நிலச் சரிவுகளுக்கும், மண் அரிப்புக்கும் காரணமாக அமைகின்றன.

இன்றைய தலைமுறையினர் தங்களை இயற்கை வளங்களின் பாதுகாவலர்களாகக் கருத வேண்டும் என்ற நமது முன்னோர்களின் மூதுரையை நாம் மறந்து விட்டோம். நாம் இயற்கை வளங்களைச் சுரண்டாமல் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்ற பொறுப்புடைமையை மறந்து விட்டோம்.

உலகம் முழுவதும் ஏற்பட்டிருந்த சுற்றுச் சூழல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில், 1948-ஆம் ஆண்டு உலகளாவிய இயற்கை பாதுகாப்பு சங்கம் தொடங்கப்பட்டது. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டுதோறும் ஜூலை 28-ஆம் தேதி ‘உலக இயற்கை வளம் பாதுகாப்பு நாள்” கடைப்பிடிக்கப்படுகிறது. ●

# இந்தவார ராசிபலன் 03.08.2025 - 09.08.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 18
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் ஒத்தி வைக்கப்படலாம். சிலர், நோய் காரணமாக, வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் இருப்பர். வரவேண்டிய புதிய தகவல்கள் தாமதமாக வரும். சிலருக்கு, பணமுடை காரணமாக, நாள் போவது யுகம் போவது போல் இருக்கும். வீட்டு வாடகை வசூல் தாமதமாகலாம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்க முடியாத நிலை உருவாகலாம். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேருவது தாமதப்படும். தனவரவு எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகை முற்றிலுமாகக் குறையும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் குறையும். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிய முயல்வீர்கள். பயணங்கள் தவிர்க்கப்பட வேண்டியதாகும். சிலரின் உடல் நலிவுறும். இதைக்கூட கவனிக்காமல், ஏதோ நினைவில் இருப்பார்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் காய் கனிந்து பழமாவது போன்ற இனிய பயணங்களை கனவில் மட்டுமே காண முடியும். உங்கள் திறமையின் காரணமாக பொருளாதார சிக்கல்கள் சீராக்கப்படும். குடும்பத்தில் இது வரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வும் ஏற்படுவது தாமதப்படும். முழு மனதுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவனத்துக்கும் சிறப்பான ஆதரவு நல்குவார்கள் உதவிகள் தாமதப்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழிக்கும் கனவு, கனவாகவே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவந்தாலும், திருமணம் தாமதமாகவே நடக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் தாமதப்படும். விற்பனைப் பிரதிநிதிகள் வெளியில் சென்று தங்கள் பணிகளை செய்ய இயலாது. பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. ஆதாயம் காண்பது அரிது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். வீட்டில் சுவையான நல்ல உணவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத தனவரவு கிட்டும். எதிர்பார்த்த, கௌரவப் பட்டங்கள், பதவிகள் தாமதமாகும். உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் அதிக தொல்லைகள் ஏற்படலாம். புதிய நண்பர்களால் தொல்லைகள் எழும். தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும் எனக் கனவு கூடக் கண்டு விடாதீர்கள். தாமதமானாலும், சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாமதமாகும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேர தாமதமாகும். திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். போதுமான ஊதியம் இருக்காது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நம்பிக்கைகளும், விருப்பங்களும் மனம்போல் நிறைவேறும். நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் ஆலோசனைகள் ஆதாயம் தரும். வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போகும். அனைத்திலும் வெற்றி எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு, வெற்றி தாமதமா கவே சித்திக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் தாமதப்படும். பயணங்கள் மேற்கொள்ள முடியாத நிலைகள் ஏற்படலாம். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பயணங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். செய்ய வேண்டும் என்று எண்ணிய காரியங்கள், செய்ய முடியாத நிலை ஏற்படும். மருத்துவப் பொருட்கள் வியாபாரம் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொள்ள நினைத்தாலும் முடியாத நிலை உருவாகும். வீட்டில் இருந்து, உண்டு, உறங்கி பொழுதை கழிப்பீர்கள். ஐ. டி பணியாளர்கள் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். தாமதமின்றிக் கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம் இருந்தாலும், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடத்த முடியாத சூழ்நிலை எழும். பொருளாதார நிலை எப்போதும் போல் நிலையாக இருக்காது. ஏற்ற இறக்கமாக இருக்கும். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைகள் தங்கள் இஷ்டத்துக்கு நடப்பர். சொன்ன பேச்சு கேட்க மாட்டார்கள். திருப்திகரமான வாரமாக இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமண முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டாலும், திருமணம் தள்ளிப் போகும். அவசிய மற்ற, அலைச்சல்கள் அல்லல் தரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளை களை ஏற்று நடக்கும்படியான சூழல் உருவாகும். வேலை அதிகரிக் கும். அதிகாரம் மிக்க உயர் பதவிகளில் உள்ளவர்கள் வீட்டுக்கு கூட போக முடியாத நிலை உருவாகும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியாது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் அரசுத் தொல்லைகளால், தள்ளிப்போகும். புதிய நடவடிக்கைகளை ஒத்திப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமாகவே கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக் கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுமே புதிய அரசியலமைப்பின் பிரதான நோக்கங்களாக இருக்க வேண்டும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக கடந்த வருடம் தேசிய தேர்தல்களில் இலங்கை மக்களுக்கு வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்த பிறகு அதற்கான செயன்முறை மூன்று வருடங்களுக்கு பின்னரே முன்னெடுக்கப்படும் என்று அறிவித்தபோது அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் பிற்பகுதியில் அவ்வாறு செய்வதில் எழக்கூடிய பிரச்னைகளை அரசியலமைப்பு நிபுணர்களும் அரசியல் ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அரசியலமைப்பை மாற்றும் செயன் முறைகளை பொதுவில் அரசாங்கங்கள் அவற்றின் பதவிக் காலத்தின் ஆரம்பக் கட்டங்களில் செய்வதே வழமை. சுதந்திர இலங்கையில் இரு குடியரசு அரசியலமைப்புகளும் அரசாங்கங்களின் பதவிக்காலங்களின் முற்பகுதியிலேயே கொண்டுவரப்பட்டன.

1970 மே மாதம் பதவிக்கு வந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972 மே மாதம் முதலாவது குடியரசு அரசியலமைப்பை கொண்டுவந்தது. 1971 ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) ஆயுதக் கிளர்ச்சியினால் இடையூறு ஏற்படாமல் இருந்திருந்தால் அந்த அரசாங்கம் முன்கூட்டியே அரசியலமைப்பை கொண்டுவந்திருக்கவும் கூடும். 1977 ஜூலையில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் 15 மாதங்களுக்குள் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றியது. அதனால், மூன்று வருடங்களுக்கு பிறகு புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுப்பது என்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அறிவிப்பின் அரசியல் விவேகம் குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டது.

ஆனால், அரசாங்கம் பதவியேற்று பத்து மாதங்கள் கடந்த நிலையில், புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கடந்த வாரம் (ஜூலை 25) பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் அறிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா கிளப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர் தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என்றும் கூறினார்.

இதற்கு முன்னதாக கடந்த ஏப்ரில் முற்பகுதியிலும் பிரதமர் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் தொடர்பில் காலவரிசை ஒன்றை குறிப்பிட்டிருந்தார்.

'புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதற்கு முன்னதாக அரசாங்கம் அவசரமாக முன்னுரிமை கொடுக்க வேண்டிய இரு விடயங்கள் இருக்கின்றன. கடந்த வருடம் அதிகாரத்துக்கு வந்தபோது அரசாங்கம் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதிலும் பல வருடங்களாக தாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதன் மூலம் ஜனநாயகத்தை உறுதிசெய்வதிலும் முழுமையாக கவனத்தைக் குவிக்க வேண்டியிருந்தது. மாகாணசபை தேர்தல்களை நடத்திய பிறகு புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை அரசாங்கம் தொடங்கும்" என்று அவர் கூறினார்.

அதேவேளை, இந்த வருடம் இந்த செயன்முறையை முன்னெடுப்பதற்கு பட்ஜெட்டில் நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை ஒத்துக் கொண்ட பிரதமர் பொதுக் கலந்துரையாடல்கள் மூலமாக முன்னைய அரசாங்கத்தினால் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டிருந்த அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடருவதற்கு அரசாங்கம் உத்தேசிக்கிறது என்று குறிப்பிட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் (2015 - 2019) அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்திருந்த வாக்குறுதியையே பிரதமரும் மீண்டும் பாராளுமன்றத்தில் கூறினார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியை அடுத்து மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் தற்போதைக்கு அரசாங்கம் அவசரம் காட்டப்போவதில்லை என்று பரவலாக நிலவிய அபிப்பிராயத்துக்கு மத்தியில் கடந்த வாரம் அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் இரத்நாயக்க அடுத்த வருட முற்பகுதியில் மாகாணசபை தேர்தல்களை அரசாங்கம் நடத்தும் என்று அறிவித்திருக்கிறார். அவர் கூறியிருப்பதன் பிரகாரம் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படுமானால், அடுத்த வருட முற்பகுதியில் இருந்து அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையும் துரிதப்படுத்தப்படும் என்று எதிர்பார்கலாம்.

முன்னைய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைக்கு பிறகு அன்றைய பிரதமர் விக்கிரமசிங்க இடைக்கால அறிக்கை ஒன்றை 2017 செப்டெம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். புதிய அரசாங்கம் அறிவித்திருப்பதன் அடிப்படையில் நோக்கும்போது அந்த இடைக்கால அறிக்கையில் இருந்தே மீண்டும் செயன்முறையை தொடங்க வேண்டும். அரசாங்கம் அது தொடர்பில் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என்பதை செயன்முறை தொடங்கும்போதுதான் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.



'13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மாத்திரமல்ல, அதையும் தாண்டிச் செல்ல வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் ஆட்சிமுறையில் சகல சமூகங்களின் பங்கேற்பையும் உறுதி செயவதற்கான ஒரு வழிமுறையே தவிர, தேசிய ஒருமைப்பாட்டுக்கான அச்சுறுத்தல் அல்ல." - லயனல் போபகே, முன்னாள் பொதுச்செயலாளர் ஜேவிபி

இந்த கட்டத்தில் முக்கியமான கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது. புதிய அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் என்ன? மக்களுக்கு வாக்குறுதி வழங்கியதன் பிரகாரம் முறைமை மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் கொண்டுவருவதாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய அம்சங்கள் எவை?

இலங்கை இன்று தீர்க்கமான ஒரு கட்டத்தில் நிற்கிறது. பல தசாப்தகால அரசியல் உறுதிப்பாடின்மை, பொருளாதார நெருக்கடி, நிறுவனங்களின் சிதைவுகளுக்கு பிறகு கடந்தகால தவறான பாதையில் இருந்து விடுபட்டு புதியதொரு பாதையில் நாட்டை வழிநடத்துவதற்கு ஜனாதிபதி திசநாயக்கவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் உண்மையில் அக்கறை இருந்தால் முதலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும். அடுத்ததாக, பல தசாப்தங்களாக நாட்டின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு பயனுறுதியுடைய அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடு ஒன்றை அரசியலமைப்பில் உள்ளடக்க வேண்டும். இந்த இரு நடவடிக்கைகளையும் தவிர புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை பொறுத்தவரை கூடுதல் முன்னுரிமைக்குரிய வேறு விடயங்கள் இருக்க முடியாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி என்பது வெறுமனே குறைபாடுகள் உள்ள ஒரு நிறுவனம் அல்ல. அது முன்னேறிச் செல்வதற்கு இலங்கைக்கு இருந்த ஆற்றல்கள் மற்றும் வாய்ப்புக்கள் சகலதையும் பாழ்படுத்திய ஒரு அரசியல் காலாசாரத்தை உருவகப்படுத்திநிற்கும் ஒரு நிறுவனமாகும். இனமோதல், பொருளாதார அனர்த்தம், மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கம் என்று இலங்கை அனுபவித்து வந்த பேரிடர்களை எல்லாம் மேலும் மோசமாக்கிய மட்டுமீறிய அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியாகும்.

இலங்கையின் அரசியல் வரலாறு ஜனாதிபதி பதவியை ஒழிக்கப்போவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்த சகல பிரதான அரசியல் கட்சிகளுமே அதை மீறிச்செயற்பட்ட கவலை தருகின்ற ஒரு முரண்நிலையைக் கொண்டது. அதிகாரத்துக்கு வந்த பிறகு அந்த கட்சிகள் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை வசதியாக மறந்ததுடன் மாத்திரமல்ல, ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை மேலும் அதிகரித்ததை நாம் கண்டோம்.

அநுர குமார திசநாயக்கவே நாட்டின் கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்று 2024 ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூறியதை மக்கள் மறந்து விடவில்லை. புதிய அரசியலமைப்பு அத்தியாவசியமானது என்றும் அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படும் என்றும் கடந்த வாரம் பிரதமர் அமரசூரியவும் பாராளுமன்றத்தில் கூறினார்.

ஜனாதிபதி பதவி ஒழிப்பு தொடர்பிலான வாக்குறுதி மீறல்கள் வட்டத்தை முறிப்பதற்கு சிறந்த சந்தர்ப்பத்தை தற்போதைய தருணம் தருகிறது. அதை தேசிய மக்கள் சக்தி தவறவிடுமானால், அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவருவதாக வழங்கிய வாக்குறுதியை மீறிய இன்னொரு கட்சி என்று வரலாற்று அபகீர்த்திக்குள்ளாக வேண்டியிருக்கும்.

கடந்த காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு மானசீகமாக விரும்பிய அரசாங்கங்களிடம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை என்கிற அதேவேளை, போதிய பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த அரசாங்கங்களிடம் அந்த பதவியை ஒழிப்பதற்கான அரசியல் விருப்பம் இருக்கவில்லை.

சொந்த அரசியல் நலன்களை மனதிற் கொண்டு செயற்படாமல் ஜனாதிபதி பதவியை ஒழிப்பதில் உறுதியாகச் செயற்படக்கூடிய தலைவர்கள் இதுவரையில் இலங்கை மக்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி திசநாயக்க அத்தகைய தலைவர்களின் வரிசையில் தானும் இணைந்து கொள்வதற்கு ஒருபோதும் விரும்பமாட்டார் என்று நம்புவோமாக!

அடுத்ததாக, புதிய அரசியலமைப்பில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக எத்தகைய அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டை அரசாங்கம் கொண்டுவரும் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜே.வி.பி. இதுகாலவரையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்துவந்த ஒரு கசப்பான வரலாற்றைக் கொண்டிருக்கிறது. அதனால் புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடுகளை உள்ளடக்குவதில் அரசாங்கத்துக்கு எந்தளவுக்கு அக்கறை இருக்கும் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

இதுவரையில் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் கூட, இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தமே விளங்குகிறது. இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பின்னர் கடந்த 38 வருடங்களாக பதவியில் இருந்த சகல அரசாங்கங்களுமே அந்த திருத்தத்தின் மூலமாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை படிப்படியாக அபகரித்து வந்திருக்கின்றன.

13 வது திருத்தத்தில் எஞ்சியிருக்கும் அதிகாரங்களை யாவது புதிய அரசியலமைப்பில் உள்ளடக்குவதில் அரசாங்கம் நாட்டம் காட்டுமா? அதில் இருப்பவற்றை விடவும் கூடுதலான அதிகாரங்களைப் புகுத்துவதற்கு அரசாங்கம் முன்வரும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிரிவினைக்கு உள்ளாகும் ஆபத்து இருக்கிறது என்று கூச்சலிடும் தென்னிலங்கை தேசியவாத சக்திகள் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை முன்னெடுக்கப்படும்போது அந்த திருத்தத்தை இல்லாமல் செய்து விடுமாறு அரசாங்கத்துக்கு நெருக்குதல்களைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுன போன்ற ஏனைய அரசியல் கட்சிகளும் அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் தற்போதைய சூழ்நிலையில் அக்கறை காட்டக்கூடிய சாத்தியமில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண தென்னாபிரிக்காவில் மண்டேலா வெளிக்காட்டியதைப் போன்ற அரசியல் ஞானம் தேவை.



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையில் இன்று அரசியல் துருவமயம் உயர்ந்த ஒரு மட்டத்தில் காணப்படுகிறது. அரசாங்கத்தின் உத்தேச கல்விச் சீர்திருத்தங்கள் மீதான விமர்சனங்களில் இந்த துருவமயத்தின் தெளிவான வெளிப்பாடுகளை காணக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கான எந்த மதிப்பையும் அதற்கு கொடுப்பதற்கு எதிரணி தரப்பில் தயக்கம் காட்டப்படுகிறது.

பொருளாதாரத்தை உறுதிப்பாடாக வைத்திருப்பது போன்ற அரசாங்கத்தின் நல்ல செயற்பாடுகளைக் கூட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளே தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன என்று கூறி மலினப்படுத்தப்படுகிறது. குற்றச்செயல்கள் மற்றும் போதைப் பொருளுடன் தொடர்புடைய வன்செயல்களுக்கு கூட அரசாங்கத்தின் செயற்திறனின்மையே காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கடந்த காலத்திலும் படுமோசமான வன்செயல்கள் இடம்பெற்றுவந்தன.

ஆனால், சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் பொருளாதார இலக்குகளை நிறைவேற்றுவது மற்றும் பொதுவில் ஆட்சிமுறை தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்தியடையடைவதாக தெரிகிறது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் இலக்குகளை நிறைவேற்றுகின்றது என்பதும் பொருளாதாரம் மற்றும் ஆட்சிமுறைச் சீர்த்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் காட்டும் பற்றுறுதியிலும் நேர்மையிலும் இது பிரதிபலிக்கிறது என்பதுமே சர்வதேச அமைப்புக்களின் நிலைப்பாடாக இருக்கிறது. உண்மையில், இலங்கையின் பொருளாதார மேம்பாடும் அரசாங்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாடும் மற்றைய நாடுகளுக்கு ஒரு உதாரணம் என்று சர்வதேச நாணய நிதியம் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறது.

இலங்கையில் அரசியல் போட்டா போட்டி ஒன்றும் புதியது அல்ல, ஆனால், அரசாங்கத்தினதும் எதிரணியினதும் உயர் மட்டங்களின் உறவுமுறையில் காணப்படுகின்ற கடுமையான தகர்வே தற்போதைய நிலைவரத்தை வித்தியாசமானதாக காட்டுகிறது. இந்த மனஸ்தாப நிலை அரசியல் கட்சிகளின் ஐக்கியத்தை வேண்டி நிற்கின்ற பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கான முயற்சிகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற பொருளாதார ஊழல் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பானவர்கள் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னென்றும் இல்லாத வகையில் எடுத்து வருவதே அரசியல் சமுதாயத்தில் காணப்படுகின்ற கடுமையான துருவமயத்துக்கு பிரதான காரணமாக இருக்கலாம். சட்டத்தினால் எட்டிப் பிடிக்க முடியாதவர்கள் என்று ஒரு காலத்தில் கருதப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக கடந்த பல மாதங்களாக தொடர்ச்சியாக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

தோல்வி காணக்கூடிய முறையில் திட்டமிட்டு அரைமனதுடன் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட கடந்த காலத்தைப் போலன்றி, இப்போது குற்றங்களைச் செய்தவர்கள் தண்டனையைப் பெறவேண்டும் என்ற மெய்யான அக்கறையுடன் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. தண்டனைக்கு ஆளாகும் பயமின்றி தாங்கள் நினைத்தபடி தேசிய அரசியல் அரங்கில் ஒரு காலத்தில் உலா வந்தவர்கள் நீதிமன்றங்களில் குற்றவாளிகளாக காணப்பட்டு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதை இப்போது காணக்கூடியதாக இருக்கிறது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய மன்றத்தின் 20 வருட நிறைவையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் 80 வது பிறந்ததினத்தையும் முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொது நிகழ்வு சமுதாயத்தின் துருவமயத்தை மீண்டும் ஒரு தடவை தெளிவாகக் காட்டியது. அது வெறுமனே முன்னாள் அரச தலைவி ஒருவரின் கொண்டாட்டமாக மாத்திரம் அமையவில்லை. தேசிய பிரச்சினைகளுக்கு மிகவும் குறிப்பாக, இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்காக கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத் தலைமைத்துவம் அக்கறைகொண்டு செயற்பட்ட ஒரு நேரத்தை நினைவூட்டுவதாகவும் அந்த நிகழ்வு அமைந்தது.



**ஆழமாக வேரூன்றிய அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட மனக்குறைகளுக்கு தீர்வு காண்பது தனியொரு கட்சியினால் கையாளக்கூடிய அல்லது அரசாங்கமே தனியாக கையாளக்கூடிய அளவுக்கு எளிதான பிரச்சினை அல்ல என்பதே யதார்த்தமாகும்.**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் இலங்கையின் உள்நாட்டுப்போருக்கு அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக சமாதானமான முடிவொன்றைக் காண்பதற்கு மிகவும் தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்தது. தேசிய கருத்தொருமிப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான அவரின் முயற்சிகள் அடிமட்டத்தில் இருந்து பாராளுமன்றம் வரை சமுதாயத்தின் சகல மட்டங்களையும் தழுவியதாக இருந்தன.

முன்னாள் ஜனாதிபதியின் வாழ்க்கையை - அவரது சிறுபராய நாட்கள் தொடக்கம் கல்வி, தனிப்பட்ட துன்பியல் அனுபவங்கள் மற்றும் ஜனாதிபதியாக பதவியேற்றது - விளக்கும் வீடியோ ஒளீபரப்பே அந்த நிகழ்வின் பிரதான அம்சமாக அமைந்தது. இனப்பிரச்னைக்கும் அப்போது தீவிரமடைந்து கொண்டிருந்த போருக்கும் அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக சமாதான வழிமுறைகளில் முடிவுகட்டுவதற்கு முன்னாள் ஜனாதிபதி முன்னெடுத்த முயற்சிகளை நினைவு மீட்டுவதே அந்த வீடியோவின் முக்கியமான செய்தியாகும்.

ஆனால், அரசியல் கருத்தொருமிப்பு இல்லாததமையினால் இறுதியில் ஜனாதிபதி குமாரதுங்கவின் முயற்சிகள் தடம்புரண்டன.

ஜனாதிபதியாக திருமதி குமாரதுங்கவின் பதவிக் காலம் முடிவுக்கு வந்து 20 வருடங்கள் கடந்த நிலையில் இடம்பெற்ற இந்த கொண்டாட்ட நிகழ்வில் அரசியல் உயர்பதவிகளை வகித்தவர்கள், இராஜதந் திரிகள், கலைஞர்கள், கல்விமான்கள் மற் றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் உட்பட நாட்டின் முக்கியமான ஆளுமைகள் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டனர். ஆனால், அரசாங்க உறுப்பினர்கள் எவரும் அதில் கலந்து கொள்ளவில்லை என்பது பிரத்தியேகமான கவனத்துக்குரியதாக இருந்தது. சகலரையும் அரவணைக்கும் உணர்வை அல்ல, ஒதுக்கிவைக்கும் உணர்வையே நிகழ்வு பிரதிபலித்தது.

முன்னாள் ஜனாதிபதி தீர்வு காண்பதற்கு கடுமையாக முயற்சித்த இனப்பிரச்சினை போர் முடிவுக்கு வந்து 16 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட தொடர்ந்து நீடிப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். இனப்பிரச்சினை என்ற ஒன்று இப்போது கிடையாது என்பது போன்று நாட்டின் பெரும்பகுதியும் நடந்துகொள்கிறது. வெளிப்படையான வன்முறை இல்லாத நிலையில், சனத்தொகையில் பெரும் பகுதியினர் இனப்பிரச்சினை இல்லை என்ற உணர்வைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்று கவலை முழு அளவில் காணப்படுகிறது.

ஆனால், அவர்கள் அதை பகிரங்கமாக பேசாமல் இருக்கலாம். அவர்களிடம் கேட்டால் இனப்பிரச்சினை இப்போது இல்லை என்பது போன்று குறைத்து மதிப்பிட்டு கதைப்பார்கள். இனப்பிரச்சினை நாட்டின் அரசியலில் குணப்படுத்தப்படாத காயமாக தொடர்ந்து நிலைக்கிறது.

ஆழமாக வேரூன்றிய அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட மனக்குறைகளுக்கு தீர்வு காண்பது தனியொரு கட்சியினால் கையாளக்கூடிய அல்லது அரசாங்கமே தனியாக கையாளக்கூடிய அளவுக்கு எளிதான பிரச்சினை அல்ல என்பதே யதார்த்தமாகும். அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது, ஏழு வருடங்களுக்கும் அதிகமான காலமாக தேர்தல் நடத்தப்படாமல் செயலிழந்துகிடக்கும் மாகாணசபைகளை முறையை மீட்டெடுப்பது போன்ற பிரச்சினைகள் அரசியல் ரீதியில் இடர்மிக்கவை என்பதுடன் பரந்தளவிலான கருத்தொருமிப்பை வேண்டி நிற்பவையுமாகும்.

அரசியல் ரீதியான எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்ற அச்சத்தில் அரசாங்கங்கள் இந்த பிரச்சினைகளை கையாளுவதை தவிர்த்துவிட்டன. இவற்றைப் பற்றி பகிரங்கமாக பேசுவதற்கு கூட தற்போதைய அரசாங்கம் காட்டுகின்ற தயக்கம் அவை தோற்றுவிக்கின்ற சவால்களின் தன்மையை உணர்த்தி நிற்கிறது. இது கூட்டாகவும் அரசாங்கத்தையும் எதிர்க்கட்சிகளையும் தழுவிய அரசியல் கருத்தொருமிப்புடனும் கையாளவேண்டிய ஒரு பிரச்சினையாகும்.

கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் உறுதிப்பாடு அதற்கு எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அகலப்படுத்தி உயர்மட்டங்களில் ஊடாட்டங்களைச் செய்வதற்கான வெளியை சுருக்கியிருக்கிறது. அரசியல் பேச்சுவார்த்தைக்கான கதவை மூடாமல் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கான முன்னோக்கிய வழிவகையை கண்டறிவது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது.

அதேவேளை, சமாளிக்க முடியாதவையாக இருக்கும் நாட்டின் சவால்களுக்கு தீர்வைக் காண்பதற்கான பாதை பிளவில் அல்ல, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கருத்தொருமிப்பை கட்டியெழுப்பும் ஆற்றலிலேயே தங்கியிருக்கிறது. ஏனென்றால், நாட்டின் நோய்களை தனியொரு கட்சியினால் குணப்படுத்த முடியாது.

இத்தகைய பின்புலத்தில், அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் இடையில் ஊடாட்டங்களைச் செய்வதற்கான பாதைகள் சீர்குலைந்திருப்பது பெரும் கவலையை தருகிறது. தேசியப் பிரச்சினைக்கு தீர்வை தனியொரு கட்சியினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ கூட காணமுடியாது. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா வெளிக்காட்டியதைப் போன்ற அரசியல் மேதகைப் பண்பும் மதிக்கூர்மையும் அவசியமாகிறது.

வெள்ளையரின் இனஒதுக்கல் அரசாங்கத்துடன் சமரசம் செய்துகொள்ளாமல் 27 வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்த மண்டேலா ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தார். ஆனால், ஒரு பதவிக்காலத்துக்கு மாத்திரம் பதவியில் இருந்த பிறகு அதிகாரத்தில் இருந்து இறங்கி நாட்டுக்கு சரியான பாதையைக் காட்டினார். இலங்கையின் இன்றைய சூழ்நிலைக்கு பொருந்தக்கூடிய வகையிலும் சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிமுறையை முன்னெடுப்பதற்கும் அதே போன்ற அரசியல் ஞானம் தேவைப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# புதைகுழிகளுக்கு நீதி கிடைக்கும்வரை ஆவிகள் துரத்திக்கொண்டேயிருக்கும்!

பனங்காட்டான்



ஊழல், மோசடி, ஏமாற்று, இலஞ்சம் ஆகியவை தங்கள் ஆட்சியில் முற்றாக ஒழிக்கப்படும் என்று அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலங்களில் தெரிவித்தது.

முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புச் சலுகைகள் மற்றும் அளவுக்கதிகமான பாதுகாப்பு ஆகியவை குறைக்கப்படும் என்றும், எம்.பிக்களுக்கான ஓய்வூதியம் ரத்துச் செய்யப்படும் என்றும் இவர்களால் தேர்தல் காலத்தில் உறுதியளிக்கப்பட்டது.

இவையெல்லாம் சும்மா சொல்லப்படுகின்றன என்று மக்கள் அப்போது நினைத்தனர். முன்னைய அரசியல் தலைவர்கள் தேர்தல் காலங்களில் சொன்னவை எதனையும் செயற்படுத்தாது விட்டதால் தேசிய மக்கள் சக்தியினரின் வாக்குறுதிகளும் அவ்வாறானது என நினைத்ததே இதற்குக் காரணம்.

ஆனால், தற்போது ஆட்சித்தரப்பினர் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் அவர்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியது. முன்னைய அரசியல் பிரமுகர்கள் பலர் உள்ளே தள்ளப்படுகின்றனர். சிலர் கடும் நிபந்தனைகளுடன் வெளிநாடு செல்ல முடியாது தடை செய்யப்பட்டு பிணையில் விடப்படுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இரண்டு புதல்வர்களின் முன்னைய செயற்பாடுகள் (கொலை, காணி மோசடி) நீதிமன்றத்தின் முன்னாலுள்ளது. தேர்தல் கால உறுதிமொழிகளை ஏன் நிறைவேற்றவில்லையென்று சில மாதங்களுக்கு முன்னர் கேட்ட 'முன்னாள்கள்', இப்போது சட்டம் தனது வேலையை ஆரம்பிப்பதில் அச்சம் கொண்டு அரசியல் பழிவாங்கல் என்று கூப்பாடு போடுகிறார்கள்.

சுறாக்களைத் தவிர்த்து இறால்களைப் பிடிக்கிறார்கள் என்றும் அரசின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஆட்சித்தரப்புக்குள் பிளவு, பிரிவு ஏற்படவில்லையென்றால் சுறாக்களும் பிடிபடலாமென பலரும் நம்புகிறார்கள். இங்கு சொல்லப்பட்டவை எல்லாம் பெரும்பான்மை சமூகத்தினரை மையப்படுத்தியவை.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எதிர்பார்க்கப்பட்டமாற்றம் எதுவும் இதுவரை காணப்படவில்லை. காணிகளை அளவிடுதல், அவைகளை அபகரிக்க அதிகாரிகளைப் பயன்படுத்துதல், பௌத்த மயமாக்கல், அரசியல் கைதிகள் விடுதலையை பேசிக் கொண்டிருப்பது, காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் கால இழுத்தடிப்பு என்று இதற்கொரு பட்டியலே உண்டு.

ஆகப்பிந்தியதாக, செம்மணியை ஒட்டிய அரியாலை சித்துப்பாத்தி மயான மனிதப் புதைகுழிகள் விடயத்தை பார்க்கலாம். நாளாந்தம் மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. ஏராளமானவை புதைக்கப்பட்ட மனிதர்களின் எலும்புக்கூட்டுத் தொகுதிகள். இவர்களுள் சிறுவர்களும் அடக்கம். கிடைக்கப்பெற்ற ஐம்பத்திநான்கு சான்றுப் பொருட்களுள் பாடாசலைப் பை, பாற்போச்சி, விளையாட்டுப் பொருட்கள் என்பவை அடையாளம் காணப்பட்டன. ஒரு குழந்தையை அணைத்தபடியான எலும்புத் தொகுதியொன்று மீட்கப்பட்டு அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புத் தொகுதிகள் மண்ணுக்குள் குட்டி போட்டவை அல்ல. குஞ்சு பொரித்தவையும் அல்ல. இப்பகுதிகளில் முகாமிட்டிருந்த அரச பயங்கரவாத படையினரின் கொடூர கொலைகளுக்கு ஆளானவர்களின் அடையாளங்கள் இவை. இவர்கள் உயிருடன் புதைக்கப்பட்டார்களா அல்லது கொல்லப்பட்டபின் புதைக்கப்பட்டார்களா என்பது இனித்தான் தெரியவரும்.

> புதைகுழிகளிலிருந்து மீட்கப்படுபவை உணர்வற்ற வெறும் எலும்புத் தொகுதிகள் அல்ல. இத்தனை வருடங்களாக நீதி கேட்பதற்கான அடையாளமாகவே அவை புதைந்திருந்தன. இதனை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இந்த புனித ஆவிகள் துரத்திக் கொண்டேயிருக்கும்.

மீட்கப்பட்ட எலும்புத் தொகுதிகளையும் சான்றுப் பொருட்களையும் அடையாளம் காட்ட வருமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் உறவினர்களும் நண்பர்களும் எத்தனை பேர் அங்கு உள்ளனர். அடையாளம் காட்டக்கூடிய எவ்வளவு தொகையினர் புலம்பெயர்ந்து வாழுகின்றனர்.


சர்வதேச ரீதியான பார்வையாளர்களும், மனித உரிமைகள் அமைப்புகளின் அலுவலர்களும் இவ்விடயத்தில் நேரடியாகப் பங்களிப்பது அவசியமானது. சர்வதேச உதவியுடன் இலங்கை அரசே உண்மையை கண்டறிய முடியுமென்று கூறப்படுமானால், அது கள்வனே கள்வனைக் கண்டுபிடிப்பான் என்பது போலாகும்.

இவ்விடயத்திலாவது ஒன்றுபட்டு ஒரே குரலில் நிற்க வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள் தங்களுக்குள் இன்னமும் முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜெனிவா விவகாரத்தில் தமிழரசும் தமிழ் காங்கிரசும் தேர்தல்கால மனநிலைவில் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். தமிழரசு கட்சிக்கு இப்போது மூன்று தலைவர்கள். முன்னர் கட்சியின் மூத்த தலைவராக இருந்த சி.வி.கே.சிவஞானம் இப்போது பதில் தலைவராகியுள்ளார். அடுத்தவர் கட்சித் தலைவராகத் தெரிவாகியும் அந்தக் கதிரையில் ஏற முடியாது தடுக்கப்பட்டிருக்கும் கிளிநொச்சியின் குறுநில மன்னரான சிறீதரன். மூன்றாமவர், எம்.பி.யாகவும் முடியாமல் கட்சித் தலைவராகவும் முடியாதுபோன சு(ம்)மா சுமந்திரன்.

சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் கூட்டமொன்றின் மேடையிலிருந்து இறக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புடன் மண்டபத்திலிருந்து வெளியேறிய இவர், இப்போது குசினிக் கூட்டங்களை (லண்டன்) நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இரண்டு கில்லாடிகளுக்கு நடுவே பதில் தலைவர் திண்டாடுகிறார் என்று உள்வீட்டுப் பிரமுகர் ஒருவர் சொன்னது சரி போலத்தான் தெரிகிறது.

தமிழரசுக் கட்சி மீதான வழக்கு விரைவில் முடிவடையுமென்று சிலர் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். அப்படித்தான் நல்ல தீர்ப்பு வந்தாலும் வேறுசில புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? கட்சிக்குள் இருந்தவாறே அதனை பலவீனப்படுத்தி இயங்க முடியாது தடுக்க ஒரு குழு தீவிரமாக இயங்கி வருவதாக உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன.

முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டது போல இலங்கையின் மூத்த அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்ட நிலைமையே இன்று தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ளது. எண்ணுக் கணக்கில் கூடிய தமிழ் எம்.பி.க்கள் தமிழரசுக் கட்சியிடம் உண்டு. உள்ளூர் ஆட்சித் தேர்தலில் வடக்கு கிழக்கில் கூடிய ஆசனங்களைப் பெற்ற தமிழ் கட்சியும் தமிழரசுதான். ஆனாலும் பல சபைகளை கைப்பற்ற முடியாது அது கோட்டை விட்டுள்ளது. முக்கியமாக நல்லூர், கோப்பாய் என்பவற்றைக் குறிப்பிடலாம்.



தெற்கில் ஐக்கிய தேசிய கட்சி காணாமற் போய்விட்டது. அதனைப் பிளவுபடுத்தி இன்னொரு கட்சியை உருவாக்கிய சஜித் பிரேமதாச ஆட்சியைப் பிடிக்க முடியாத ஒரு தலைவராக தம்மை இனங்காட்டியுள்ளார். பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்டு ஐக்கிய தேசிய கட்சியை வீழ்த்திய சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்து இயங்க முடியாது போய்விட்டது. அதனைப் பிளவுபடுத்தி பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை உருவாக்கி ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவால் அதனை காப்பாற்ற முடியவில்லை.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தளவில் தமிழரசுக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சி ஆகியவற்றின் நிலைக்கு இறங்கியுள்ளது. எழுபத்தைந்தாவது வயதிலிருக்கும் இக்கட்சிக்கு எழுச்சியைக் கொடுக்கக்கூடிய ஒரு மாநாட்டை நடத்தும் வல்லமை கூட இல்லாமல் போய்விட்டது.

மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லாதது என்ற வாக்குக்கு அமைய தெற்கில் ஜே.வி.பி. புதிய பெயரான தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இதுபோன்று தமிழர் தாயகத்தில் புதிய சக்தியொன்று ஏற்படக்கூடிய வாய்ப்பு எப்போது ஏற்படும்?

மாகாண சபைகள் என்றும், உள்ளூர் நிர்வாகம் என்றும், சமஷ்டி என்றும் எவ்வளவு காலத்துக்கு பேசிக்கொண்டிருக்க முடியும்? பதின்மூன்றாம் திருத்தத்தை அறிமுகம் செய்த இந்தியாவே அதனை மறந்துவிட்டது. இல்லாதவைகளை பேசிக் கொண்டிருப்பதைவிட்டு, இருப்பவைகளை முழுமையாக பயன்படுத்தப் பாருங்கள் என்று கடந்த வருடம் தம்மைச் சந்தித்த தமிழ் அரசியல் பிரமுகர்களிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறியதில் ஆழமான அர்த்தம் உண்டு.

தெற்கில் அரசியல் நகரும் பாதையைப் பார்த்தால் இந்தக் குட்டித்தீவில் இனிமேல் தேர்தல்கள் நடைபெறுமா என்பது சந்தேகமாகத் தெரிகிறது. அமைச்சர் ஜெய்சங்கர் சொன்னதுபோல் இருப்பவைகளைப் பாதுகாப்பதே இன்றுள்ள பிரதான இலக்காக இருக்க வேண்டும். தமிழர் இப்போது அனுபவிக்கும் அற்ப சொற்ப உரிமைகள் எதுவும் தாமாக அவர்களுக்குக் கிடைத்தவையல்ல. உரத்துக் கேட்டும் பல்வேறு வகைகளால் போராடியும் பெறப்பட்டவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மனிதப் புதைகுழிகளுக்கு வழமைபோல இனவாத நாக்குகள் வேறு வியாக்கியானங்களைக் கொடுக்கின்றன. இதனை எதிர்த்து போராடியே நீதியை பெற வேண்டி ஏற்படலாம். இதற்குத் தேவையானது தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை. காணாமலாக்கப்பட்டோர் விடயம் போல மனிதப் புதைகுழி விவகாரமும் காலமாகிப் போகலாமென்ற அச்ச உணர்வு மக்கள் மனதில் இருக்கிறது.

புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டவையும், மீட்கப்பட இருப்பவையும் வெறும் எலும்புக்கூடுகள் அல்ல. அவை எந்தப் பாவமும் புரியாத ஏதுமறியாத அப்பாவிகளின் எச்சங்கள். தமிழராகப் பிறந்த குற்றத்தால் அரச பயங்கரவாதத்துக்கு பலியானவர்கள். தாங்கள் கொல்லப்பட்டதற்கு நியாயம் கேட்டு அலையும் இந்த ஆவிகள், நீதி கிடைக்காதவரை சாந்தி பெறமாட்டா. தங்கள் பெயரில் அரசியல் பிழைப்பு நடத்துபவர்களை இவர்கள் துரத்திக் கொண்டேயிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதில்மேல் குப்பை: ஒரு கூட்டுப் பொறுப்பு



நிலாந்தன்



நான் வசிக்கும் பகுதியில் கிழமை தோறும் கழிவகற்றும் வண்டி வரும் நாட்களில் சில வீட்டு மதில்களில் குப்பைப் பைகளை அடுக்கி வைத்திருப் பார்கள். அல்லது மதிலில் ஒரு கம்பியை கொழுவி அந்த கம்பியில் குப்பைகளைக் கழுவி வைத்திருப்பார்கள். ஏனென்றால், குப்பை அகற்றும் வண்டி உரிய நேரத் துக்கு வருமா வராதா என்ற சந்தேகம். அது வரத் தவறினால் நிலத்தில் வைக்கும் குப்பைகளை நாய்கள் குதறிவிடும். கட் டாக்காலி நாய்களை இன்றுவரை கட்டுப் படுத்த முடியவில்லை. இது யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள ஒரு பகுதி.

இன்னொரு பகுதி குரு நகரில். "தாங்கள் தொழில் செய்யும் கடலிலேயே அப்பகுதி மக்கள் கழிவுகளை கொட்டுகிறார்கள்" என்று ஒரு மதகுரு தெரிவித்தார். அப்பகுதியில் சூழலில் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் சொன்னார் குருநகர் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் உள்ள கடலில் இருந்து தொடங்கி குறிப்பிடத்தக்களவு தூரம் அவ்வாறு கடற்கரையில் பிளாஸ்டிக் கழிவுகளும் உட்பட அனைத்து விதமான கழிவுகளையும் காணக்கூடியதாக இருக்கும் என்று. சில சமயம் செத்த நாயை கொண்டு வந்து போடுகிறார்கள். சில சமயம் பழைய ஆடைகள் கடலில் மிதக்கும். இவற்றோடு வளமை போல பிளாஸ்டிக் கழிவுகளும் காணப்படும் என்று.

மேற்குறிப்பிட்ட மதகுரு சொன்னார், "கரையோரக் குடியிருப்புகளில் வீடுகளுக்கு முன்னாலும் நிலம் இல்லை பின்னாலும் நிலம் இல்லை. எனவே வீட்டுக் கழிவுகளை அவர்கள் எங்கே கொட்டுவது? சாப்பாட்டுக் கழிவுகளை வீட்டுக்குள் வைத்தால் சில நாட்களில் அவை புழுக்கத்தொடங்கி விடும். எனவே இந்த கழிவுகளை அகற்றுவதற்கு ஒரு பொருத்தமான வழிமுறை வேண்டும். ஒவ்வொரு கிழமையும் ஒரு நாள் தான் கழிவு அகற்றும் வண்டி வரும் என்றால் ஏனைய நாட்களில் கழிவுகளை எங்கே கொட்டுவது? ஏனென்றால் ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்கழிவு வருந்தானே?" என்று.

ஒவ்வொரு நாளும் கழிவை அகற்றுவதற்கு போதிய வாகனங்கள் இல்லை என்று மாநகர சபை நிர்வாகம் கூறுகின்றது. மாநகர சபையில் மட்டுமல்ல இந்த பிரச்சினை உள்ள எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் அதுதான் நிலைமை. போதிய அளவு வாகனங்கள் இல்லை வளங்களும் இல்லை.

கழிவை முகாமை செய்வதற்கு போதிய அளவுக்கு பொருத்தமான வளங்கள் இல்லை என்பது ஒரு புறமிருக்க, கழிவை முகாமை செய்வது என்பது தனிய உள்ளூராட்சி சபையின் பொறுப்பு மட்டுமல்ல. அது மக்களுடைய பொறுப்பும் தான் என்று அண்மையில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு செயற்பாட்டாளர் முகநூலில் எழுதியிருந்தார்.

சுத்தமாக இருப்பது ஓர் ஒழுக்கம். தமது சூழலை சுத்தமாக வைத்திருப்பது என்பது ஒரு பொறுப்புஒரு பண்பாடு. வட்டாரங்கள்தோறும் கழிவை சேகரிக்கும் மையங்களை உருவாக்க வளங்கள் இருக்கின்றதோ இல்லையோ அவ்வாறு உருவாக்கப்படும் மையங்களில் மக்கள் கழிவுகளை எவ்வாறு போடுகிறார்கள் என்றும் பார்க்க வேண்டும். அதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் தொட்டிகளில் பக்குவமாகக் கழிவைக் கொண்டு போய்ப் போடுவது எத்தனை பேர்? பதிலாக வாகனத்தில் நின்றபடியே தொட்டியை நோக்கி அதை வீசுபவர்கள் எத்தனை பேர்? இதற்கு முன்பு அவ்வாறு கழிவு சேகரிக்கும் மையங்களை உருவாக்கிய பொழுது அந்தப் பகுதியையே குப்பையாக்கிவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் முறையற்ற கழிவகற்றல் உயிர் பல்வகமைக்கு ஆபத்து விளைவிக்கும் என்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கணபதி கஜபதி.

இது ஒரு சமூகப் சமூகப் பொறுப்பு. தன் வீட்டுக்கு குப்பையை மற்றவரின் தலையில் கொட்டுவது. தான் சுத்தமாக இருந்தால் போதும் மற்றவர்கள் எப்படியும் அழுகி நாறட்டும் என்ற சிந்தனை. இந்த சுயநலம் இருக்கும்வரை ஒருவர் மற்றவரை நேசிக்க முடியாது. ஒரு சமூகமாகத்தானும் திரள முடியாது. இதற்கு சட்டம் இயற்றி கமராவைப் பூட்டி எத்தனை நாட்களுக்கு கண்காணிப்பது? தண்டனைகளின் மூலம் மட்டும் சமூகப் பொறுப்பை, கழிவு முகாமைத்துவப் பண்பாட்டை உருவாக்க முடியுமா?

அண்மையில் பொது இடங்களில் வெற்றிலை துப்பியதற்காக ஏழு பேர் கைது செய்யப்பட்டதாக ஒரு தகவல் வெளிவந்தது. இதுதொடர்பாக ஏற்கனவே நான் எழுதியிருக்கிறேன். பெரும்பாலான சந்தைகளில் மூலைகளில் வெற்றிலை துப்பல்களை பார்க்கலாம். அது மட்டுமல்ல வாகனம் ஓடிக் கொண்டிருக்கும் பொழுதே வாகனத்தின் சாரதி அல்லது பேருந்தில் பயணிப்பவர்கள் வெற்றிலையைத் துப்புவார்கள் அது காற்றில் பறந்து வந்து உங்களுடைய முகத்தில் படும்.எச்சில் நெடி அன்றைய நாளையே அருவருப்பானதாக ஆகிவிடும்.

இங்கே இந்த இடத்தில், இலங்கைத் தீவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கிடைத்த ஒரு அனுபவத்தைக் குறிப்பிட வேண்டும். பிரேமதாச ஊரில் அதிகம் பிரபல்யமாகாத ஒருவராக இருந்த காலத்தில் தன்னுடைய முதலாவது நேர்முகத் தேர்வுக்காக புதிய ஆடைகளை அணிந்து கொண்டு பேருந்தில் ஏறுவதற்கு மத்திய பேருந்து நிலையத்துக்கு வந்திருக்கிறார். அங்கே நகர்ந்து கொண்டிருந்த பேருந்தில் இருந்[illegible] வெற்றிலை எச்சிலை வெளியே துப்பியிருக்கிறார். அது பிரமதாசாவின் முகத்திலும் தலையிலும் சட்டை முழுவதிலும் பட்டிருக்கிறது. திகைத்துப்போன பிரேமதாச துக்கத்தோடு தாயாரிடம் திரும்பி ஓடி வந்திருக்கிறார். தாயார் மகனைத் தேற்றி நம்பிக்கையூட்டியிருக்கிறார். நீ முழுகிவிட்டு வா நான் இருப்பவற்றில் நல்ல உடுப்பை அயர்ன் பண்ணித் தருகிறேன் என்று கூறியிருக்கிறார். தாய் கொடுத்த உற்சாகத்தோடு வேறு ஓர் உடுப்பை அணிந்து கொண்டு நேர்முகத் தேர்வுக்கு போன பிரேமதாச அங்கே நூலக உதவியாளராக தெரிவு செய்யப்படுகிறார். அங்கிருந்துதான் அவருடைய அரசியல் வாழ்வு தொடங்குகிறது.

> **உள்ளூராட்சி மன்றத்துக்குள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து முடிவெடுக்க வேண்டிய விடையங்களில் புதிய உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டுப் பொறுப்பை நிரூபிக்குமாக இருந்தால் மக்களிடமும் கூட்டுப்பொறுப்பை எதிர்பார்க்கலாம்.**

பேருந்தில் பயணம் செய்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஜன்னலுக்கு வெளியே துப்புகிறார்கள்.மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் துப்பிவிட்டுப் போகிறார்கள். அது காற்றில் பறந்து வந்து பின்னால் வருகிறவரின் முகத்தில் துர் நெடியோடு படியும். எவ்வளவு அருவருப்பு? அது இப்பொழுது தண்டனைக்குரிய குற்றம்.தன் குப்பையை மற்றவர்களின் தலையில் கொட்டுவதும் குற்றம். தண்டனைகளால் மட்டும் அவ்வாறான சமூகப் பொறுப்பை பண்பாட்டை உருவாக்க முடியுமா?

திருநெல்வேலி சந்தைக்குள் காறித் துப்பும் ஒருவர் தன் வீட்டுக்குள் அதைச் செய்ய மாட்டார். ஏனென்றால் அது அவருடைய சொந்த வீடு. தான் சுத்தமாக இருந்து கொண்டு மற்றவர்கள் வாழும் சூழலை அசுத்தமாக்குவது ஒரு நாகரிகம் அடைந்த மக்கள் கூட்டம் செய்கிற வேலையல்ல.

கழிவை அகற்றுவது என்பதற்கு பதிலாக கழிவை முகாமை செய்வது என்று சிந்திப்பதே பொருத்தமானது என்று சமூகச் செயற்பாட்டாளராகிய செல்வின் கூறினார். கழிவு முகாமைத்துவத்தை வளர்ச்சியடைந்த நாடுகள் லாபகரமான ஒரு தொழிலாக மாற்றி விட்டன. அங்கெல்லாம் கழிவு விற்கப்படுகிறது. வாங்கப்படுகிறது. மீள சுழற்சிக்கு உள்ளாக்கப்பட்டு மீண்டும் விற்கப்படுகிறது. எனவே கழிவு முகாமைத்துவத்தை எப்படி வணிகப் பண்புடையதாக மாற்றலாம் என்று சிந்திக்கலாம். அது ஒரு கூட்டுப் பொறுப்பு. ஆனால் அந்த கூட்டுப் பொறுப்பை மக்களுக்கு உணர்த்துவது யார்? உள்ளூர்த் தலைவர்கள் உள்ளூார் முன்னுதாரணங்களாக மாறினால்தான் அவ்வாறு கூட்டுப் பொறுப்பைக் கட்டியெழுப்பலாம். உள்ளூார்த் தலைவர்கள் முதலில் பிரதேச சபைக்குள் தமது கூட்டுப் பொறுப்பை நிரூபிக்க வேண்டும். குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்துக்குள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து முடிவெடுக்க வேண்டிய விடையங்களில் புதிய உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டுப் பொறுப்பை நிரூபிக்குமாக இருந்தால் மக்களிடமும் கூட்டுப் பொறுப்பை எதிர்பார்க்கலாம். குப்பை விடயத்தில் மட்டுமல்ல எல்லா விடயத்திலும் கூட்டுப் பொறுப்பை எதிர்பார்க்கலாம். தலைவர்கள் எவ்வழியோ மக்களும் அவ்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள்: - வேண்டும் - வேண்டாம் - வேண்டவே வேண்டாம்

கந்தையா அருந்தவபாலன்

இலங்கை அரசியலில் அது வடக்காக இருந்தாலும் தெற்காக இருந்தாலும் அவ்வப்போது மாகாண சபைகள் தொடர்பான கருத்தாடல்கள் தோன்றி மறைவது தொடர்ந்த வண்ணமே உள்ளன. சிலகாலம் அது தொடர்பாகப் பரபரப்பாகப் பேசப்படும். பின்னர் சிலகாலம் அதுபற்றிய செய்திகளை காணமுடியாது. மீண்டும் திடீரென அதுபற்றிய பேச்சுக்கள் உலாவத் தொடங்கும். இந்த அலை வழியே சென்ற மாதத்தில் மீண்டும் மாகாணசபை பற்றியும் அதற்கான தேர்தல் பற்றியும் இருபுறத்திலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. தெற்கில் அரசாங்க அமைச்சர்கள், முன்னாள் பிரதம மந்திரி தினேஷ் குணவர்த்தனா, தேர்தல் ஆணையாளர், மனித உரிமை அமைப்புகள், நாடாளுமன்றம் போன்ற பலதரப்புகளும் இது பற்றிப் பேசிய வேளை வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் தலைவர்களும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும் இது தொடர்பாகப் பேசியிருந்ததைக் காணமுடிந்தது.

1987இல் அரசியலமைப்புக்குள் புகுத்தப்பட்ட 13 ஆம் திருத்தமும் அதன்மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளும் ஆரம்பம் தொடங்கி இன்று வரையும் இழுபறி நிலைக்குட்பட்டதொன்றாகவே இருந்து வருகிறது. ஆரம்பத்தில் குறித்த 13ஆவது திருத்தம் அரசியலமைப்புக்கு முரணானதா? குறிப்பாக ஒன்றையாட்சி முறையை கேள்விக்குட்படுத்துகிறதா? அதற்கு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு அவசியமா? போன்ற கேள்விகளுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஒன்பது பேருக்கிடையில் எவ்வாறு பிளவுகள் காணப்பட்டதோ அவ்வாறே இன்றுவரையும் இந்த மாகாணசபை தொடர்பாக தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலும், வடக்கில் தமக்கிடையிலும் அதேபோல தெற்கில் தமக்கிடையிலும் முட்டி மோதிக்கொள்ளும் நிலையே தொடர்கிறது. இதன் காரணமாகவே இச்சபையினூடாக கிடைக்கக் கூடிய நலன்களும் கிடைக்காமல் போய்விட்டன. இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் யாருக்காக மாகாணசபைகள் உருவாக்கப்பட்டனவோ அவர்களுக்கு அது அதிக பயனளிக்கவில்லை அல்லது அவ்வாறு அது பயன்படுத்தப்படவில்லை. யாருக்கு அவசியமில்லையோ அவர்கள் அதை முடிந்தளவு பயன்படுத்தி நலன்களைப் பெற்றுக்கொண்டமையாகும்.

மாகாண சபைகள் தொடர்பாக வடக்கிலும் தெற்கிலும் ஒரே வகையான கருத்துக்கள் இருந்தாலும் அவ்வகைக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் மக்களின் எண்ணிக்கையானது தலைகீழாக உள்ளது. அதாவது மாகாண சபைகள் வேண்டும், வேண்டாம், வேண்டவே வேண்டாம் என்ற கருத்துநிலை இரு புறமும் காணப்படினும் இவ்வகைக் கருத்து நிலைகளுக்கான மக்கள் ஆதரவு தலைகீழாக உள்ளது. எடுத்துக்காட்டாக இன்றைய நிலையில் மாகாண சபைகள் வேண்டவே வேண்டாம் என்று சிங்கள மக்களில் அதிகமானவர்களின் கருத்து நிலைப்பாடாக இருக்கையில் அதற்கு எதிர்மாறாக மாகாண சபைகள் வேண்டும் அல்லது இருந்தால் நல்லது எனக் கருதுவோர் அதிகளவில் தமிழர்களில் உள்ளனர்.

இவ்விடத்தில் வேண்டும், வேண்டாம், வேண்டவே வேண்டாம் என்ற கருத்து நிலைகள் தொடர்பான தெளிவு அவசியமானது. ஒன்று இது ஒரு பருமட்டான வகைப்பாடு. இரண்டாவது இன்றைய அரசியல்,பொருளாதார, சமூகக் களநிலைமைகளைக்கொண்டதொரு மதிப்பீடு மட்டுமே. மேற்குறித்த களநிலைமைகள் அதிலும் குறிப்பாக அரசியல் களநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழுமிடத்து ஒவ்வொரு கருத்து நிலையையும் ஆதரிக்கும் மக்கள் எண்ணிக்கையும் மாற்றமடையக்கூடும். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு விடுதலைப் புலிகளின் காலத்தில் வேண்டவே வேண்டாம் என்ற கருத்து நிலைப்பாட்டுக்கு இருந்த மக்கள் ஆதரவு இன்று அதற்கில்லை.

மாகாண சபைகள் வேண்டும் அல்லது இருந்தால் நல்லது என்ற கருத்தும் அதுவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற கருத்தும் வேறானவை. உண்மையில் எந்தவொரு தமிழ்த் தரப்பும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக மாகாணசபை முறைமையினை ஏற்றுக் கொள்ளவில்லை. ஓர் உயர்ந்த மட்ட சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறையே அப்பிரச்சினைக்கான பொருத்தமான தீர்வாக அமையும் என்பதில் எல்லோரும் உடன்பட்டு நிற்கின்றனர். தற்போதைய வெற்றிடத்துக்கும் சமஷ்டி என்ற இலட்சியத்துக்குமிடையில் கடைப்பிடிக்கவேண்டிய அணுகுமுறை தொடர்பிலேயே தமிழ்த் தரப்புகளுக்கிடையில் வேற்றுமை காணப்படுகிறது. மாகாண சபை வேண்டும், அதற்கான தேர்தல் அவசியம் என்ற தரப்பின் நிலைப்பாடு என்பது தமிழ் மக்களின் அரசியல் கையறு நிலையினால் உந்தப்பட்ட ஒன்று என்று கூறமுடியும். இது தமிழ் மக்களின் இருப்பில் எஞ்சியதையாதல் இதன்மூலம் காப்பாற்ற முனையும் எண்ணங்கொண்டது. இதிலிருந்து படிப்படியாக தமிழ் மக்களின் இலட்சியத்தை நோக்கி நகரமுடியும் என்பது மாகாண சபைகள் வேண்டும் என்போரின் கோட்பாட்டடிப்படையிலான நம்பிக்கையாகும்.

மாகாணசபைகள் வேண்டாம் என்ற கருத்து நிலையில் இருப்பவர்கள் அதனைத் தீவிரமாக எதிர்க்கும் மனப்பாங்கு கொண்டவர்கள் அல்லர். வேண்டும், வேண்டவே வேண்டாம் என்ற இருநிலைகளுக்கும் இடைப்பட்டவர்கள். உண்மையில் அவர்கள் மாகாணசபை முறைமையை ஏற்கும் மனப்பாங்கு உடையவர்கள். ஆனால் தற்போதுள்ள மாகாண சபைகள் பயனற்றவை என்று கருதுபவர்கள். தற்போதைய நிலையில் அதற்கு எந்தவொரு சுயாதீனமான அதிகாரமுமில்லை. அதனால் உருப்படியாக எதையும் செய்ய முடியாது. அவ்வாறானதொன்று இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன எனக் கருதுபவர்கள். மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுமல்லாமல் 13 ஆந் திருத்தத்துக்மைய அதன் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என எதிர்பார்ப்பவர்கள். இவர்களின் வேண்டாம் என்ற நிலைப்பாடு என்பது முழு




> **தேசிய மக்கள் சக்தி தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்காக தனது அடிப்படைக் கொள்கைகளைத் தவிர்க்கமுடியாத வகையில் தியாகஞ் செய்து நடைமுறை ஒழுங்குகளுடன் ஒத்துப்போவதற்கான பல சமரசங்களைத் தற்போது செய்துவருகிறது. அந்தவகையில் மாகாணசபை தொடர்பான அதன் அடிப்படை கருத்து நிலையிலும் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படலாம் எனச் சிலர் நம்புகின்றனர்.**

அதிகாரங்களை கொண்ட மாகாண சபைகள் வேண்டும் என்ற நிலைப்பாடு எனக் கொள்ள முடியும். அதனால் இவர்களில் பெரும்பாலானோர் அவசியநிலையொன்று தோன்றுமிடத்து மாகாணசபைகள் வேண்டும் என்போருடன் இணைந்துவிடுவர்.

வேண்டவே வேண்டாம் என்பது மாகாண சபை முறைமையை முற்றாக எதிர்க்கும் கருத்து நிலையாகும். மாகாண சபைகள் தமிழ் மக்களின் அரசியல் இலட்சியத்தை அடைவதற்கான இடைக்கால அணுகு முறையல்ல. அது அந்த இலட்சியத்தை அழிப்பதற்கான அணுகுமுறை என்பதே அது வேண்டவே வேண்டாம் என்பவர்களின் நிலைப்பாடு. ஒன்றையாட்சி முறையின் கீழான இதுபோன்ற எந்தவொரு தீர்வும் தமிழ்மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே அமையும். அதனால் அவ்வாறானவற்றை ஏற்கமுடியாது, ஏற்கக்கூடாது என்பதில் உறுதியானவர்கள் இவர்கள். உண்மையில் இவர்களது நிலைப்பாடு என்பது ‘அடைந்தால் மகாதேவி. இல்லையேல் மரணதேவி’ என்ற நிலைப்பாடுதான். ஆனால் அந்தத் தீவிர நிலைப்பாட்டை அவர்கள் தானாக எடுக்கவில்லை. அந்த நிலைப்பாடுக்கு அவர்களை தள்ளியது இலங்கை ஆட்சியாளர்கள்தான். அவர்கள் காலங்காலமாக தமிழ் மக்களை ஏமாற்றியதன் பட்டறிவே இவர்களின் இந்த நிலைக்கான காரணம். தமிழர்களின் ஆயுதப் போராட்டமும்கூட தமிழ் மக்கள் பெற்ற இந்த கசப்பான அனுபவத்தின் குழந்தைதான். அவற்றுள் இந்த மாகாண சபையும் ஒன்று என்பதே அவர்களது கருத்தாகும். ஆனால் விடுதலைப் புலிகளின் காலத்துக்குன் பொருத்தமான இந்த நிலைப்பாடு தற்போதைய நிலையில் எவ்வளவுதூரம் பயனளிக்கும் என்பது ஆழமாகச் சிந்திக்கவேண்டிய ஒரு விடயமாகும்.

தற்போதைய நிலையில் மாகாணசபை வேண்டும் என்ற அணுகு முறையில் முன்னாள் போராளிகளின் தலைமையாகக் கொண்ட கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் போன்றன உறுதியாக உள்ளன. யதார்த்த நிலைக்கப்பால் இக்கட்சிகளின் இந்தியச் சார்புநிலையும் இதன் பினால் இருக்கக் கூடும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்த மட்டில் இதற்கு முற்றாக எதிர் நிலையில் உள்ளது. அது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால அணுகுமுறையாக மாகாணசபைகளை ஏற்றுக்கொள்ளமாட்டாது. இக்கட்சியுடன் தமிழ்த் தேசியப் பேரவை எனும் பதாகையின் கீழ் இணைந்திருக்கும் ஏனைய தரப்புகளின் தற்போதைய நிலைப்பாடு தெளிவற்றது. எனினும் வேண்டுமா அல்லது வேண்டாமா என்ற இறுதிநிலை வரும்போது அத்தரப்புகள் வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் சமரசம் செய்வதற்கான வாய்ப்புகளே அதிகம்.

பிரதான தமிழ்க்கட்சியான தமிழரசைப் பொறுத்தமட்டில் அது வேண்டவே வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் இல்லை என்பது உறுதி. முன்னாள் போராளிகளின் கட்சித் தலைவர்கள் போல அக்கட்சி தனது உறுதியான நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தாத போதும் அது வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகவே தென்படுகிறது. மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதில் அது உறுதியாக இருப்பது இதனை எடுத்துக்காட்டுகிறது. எவ்வாறெனினும் முக்கிய விடயங்களில் தமிழரசுக்கட்சியின் தீர்மானம் என்பது தனிநபர் தீர்மானந்தான். பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகளின் நிலையும் அதேதான் என்றாலும் தமிழரசுக் கட்சியில் அந்நிலைமை ஒப்பீட்டுரீதியில் கூடிய முனைப்புடையது. வெளியில் எவ்வாறுதான் கதைத்தாலும் உள்ளே இதுதான் நிலைமை. முன்னர் சம்பந்தன் அந்த தீர்மானங்களை எடுத்தார். இப்போது அந்த இடத்தில் சுமந்திரன் உள்ளார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவே வேண்டும் என ஒட்டுமொத்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி கூட்டுக்கட்சித் தலைவர்களும் விரும்பிய போதும் விக்கனேஷ்வரனே என்ற சம்பந்தன் முடிவே இறுதியும் அறுதியுமானது. அதுமட்டுமன்றி தமிழரசுக் கட்சியின் முக்கிய அரசியல் தீர்மானங்களில் ஏனைய கட்சிகளைவிட கொழும்பு, டெல்கி, மேற்குலகு என்பவற்றின் கருத்தியல் செல்வாக்கு அதிகமிருக்கும். அவற்றை உள்வாங்கி சுமந்திரன் எடுக்கும் தீர்மானமே கட்சியின் தீர்மானமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்க முடியும்.


தெற்கைப் பொறுத்த மட்டில் வேண்டவே வேண்டாம் என்பதற்கே அதிக ஆதரவு நிலையுள்ளது. தீவிர பௌத்த சிங்கள இனவாத கட்சிகளும் தலைவர்களுந்தான் இந்த நிலையில் உள்ளனர் என்று எண்ணுவது தவறு. அவர்கள் வெளிப்படையாக தெரிவிக்கிறார்கள். மற்றவர்கள் தேர்தல்களில் தமிழ் வாக்குகளுக்காக அடக்கி வாசிக்கிறார்கள் அந்தளவே. அண்மையில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனா எழுப்பிய மாகாணசபைகள் அவசியமானையா என்ற கேள்வியே தெற்கின் உண்மையான நிலை. தமிழர்களுக்கு எதையும் உருப்படியாக வழங்கக் கூடாது என்பதில் தெற்கு சகல வேற்றுமைகளையும புறமொதுக்கி ஒன்றாக நிற்கும் என்பது வரலாறு. தெற்கின் சில முற்போக்குவாதிகளும் சில புத்திசீவிகளும் மட்டுமே மாகாணசபைகள் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். அவர்களில் சிலர்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சிக்கப்பட வேண்டியது சவூதியா?

எம்.என்.எம்.யஸீர் அறபாத்
- ஓட்டமாவடி.



சமகாலத்தில் உலக நாடுகளை உலுக்கிக் கொண்டிருக்கும் நிகழ்வு பலஸ்தீன விவகாரமாகும். மனிதநேயம் கொண்டவர்களைக் கலங்கடித்துக் கொண்டிருக்கும் நிகழ்வு காஸாவின் அழுகுரலாகும்.

பலஸ்தீன விவகாரம் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. கள்ளத்தனமாக இஸ்ரேல் என்ற நாடு தோற்றுவிக்கப்பட்ட பின்னணியிலிருந்து ஆரம்பமானது.

அன்று அரபு நாடுகள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கும், அக்கிரமத்திற்கும் எதிராகப்போரிட்டு பல இழப்புகளைச் சந்தித்ததை மறந்து விட முடியாது.

கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் காரணமாக இன்றைய சூழலை எவ்வாறு கையாள்வது? என்பதில் அரபுலகு கண்ணுங்கருத்துமாகச் செயற்படுவதைக் காணலாம்.

இச்சூழ்நிலையில் பலஸ்தீன விவகாரத்தில் சவூதி அரேபியாவை பலர் விமர்சனம் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இஸ்லாமிய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளதால் சவூதி அரேபியா முஸ்லிம்களின் முக்கியத்துவம் வாய்ந்த நாடாகத் திகழ்கின்றது. இரு புனிதஸ் தலங்கள் அமைந்திருப்பதோடு, இஸ்லாம் வளர்ந்த பிரதேசம், தங்களது உயிரிலும் மேலாக நேசிக்கும் நபி(ஸல்) அவர்கள் பிறந்து, வாழ்ந்த பிரதேசம் என்ற அடிப்படையில் உலக முஸ்லிம்களால் நேசிக்கப்படும் தேசமாக சவூதி அரேபியா உள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

உலக நாடுகளில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் சவூதி அரேபியா என்ற நாடு உலக முஸ்லிம்களின் விவகாரத்தில் கரிசனைகாட்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு சவூதி அரேபியா மீது கொண்டுள்ள நம்பிக்கை முஸ்லிம் விரோத சக்திகளுக்கு அடிக்கடி எரிச்சலைக் கொடுத்து வருகின்றது.

அதேநேரம், சவூதி தன்னாலான அனைத்து உதவிகளையும் ஏனைய முஸ்லிம் நாடுகளுக்கும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளுக்கும் தொடராக வழங்கி வருவதைக் காணலாம்.

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இலங்கை போன்ற நாடுகளிலும் பல அபிவிருத்தித்திட்டங்களுக்கு பெருமளவு நிதிகளை வழங்கி வருவதும், அங்கு வாழும் முஸ்லிம்களின் விவகாரத்தில் கரிசனையோடு செயற்படுவதும், பிரச்சினைகள் வரும் போது இராஜதந்திர ரீதியாக அழுத்தங்களைக்கொடுத்து தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதையும் கடந்தகால நிகழ்வுகளிலிருந்து காணலாம்.

சில நாடுகளில் கொடுமைகளை அனுபவித்த முஸ்லிம்களுக்கு தன்னுடைய நாட்டுக்குள் தஞ்சம் கொடுத்து சவூதி வாழ வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

சவூதி அரேபியாவில் காணப்படும் எண்ணெய் வளம் உலகில் முக்கியத்துவம் பெற்றதாகும். சவூதியோடு உறவைப்பலப்படுத்திக்கொள்ளவே உலக நாடுகள் விரும்புகின்றன. முஸ்லிம் நாடுகளில் பலமான நாடாக சவூதி விளங்குவதாலும் முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பிலும் முஸ்லிம்களின் விவகாரங்களில் தலையீடு செய்வதிலும் அதிக பங்கு சவூதி அரேபியாவிற்கே இருக்கின்றது.

சவூதியைப்பலவீனப்படுத்த வேண்டுமென்பதில் சவூதியின் வளர்ச்சியைப் பிடிக்காத முஸ்லிம் விரோதச்சக்திகள் சவூதிக்கெதிரான விமர்சனங்களை பூதகரமாக்கி மக்கள் மயப்படுத்துவதில் அன்று தொட்டு இன்று வரை முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

சவூதியை அழிப்பதற்கு முதல் உலக முஸ்லிம்களின் உள்ளத்திலும் சவூதி அரேபியாவின் ஆட்சியாளர்களுக்கெதிரான மனோநிலையினை ஏற்படுத்தி வெறுப்பை உருவாக்கி ஏனைய நாட்டிற்குள் அரபு வசந்தம் என்ற போர்வையில் உள்நுழைந்து அந்த நாடுகளை நாசம் செய்தது போல் சவூதியையும் நாசம் செய்து புனிதஸ்தலங்களையும் துவம்சம் செய்ய வேண்டுமென்ற எண்ணமாகும்.

பல முறை பல முயற்சிகள் நடந்தும் இறைவன் அருளால் அவை முறியடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

தற்போது நீண்ட நாட்களாக பலஸ்தீனத்தின் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும் காஸாவின் அழுகுரல்களும் முஸ்லிம் உம்மத்தை மாத்திரமின்றி, மனிதநேயமிக்க மக்களையும் நாடுகளையும் உலுக்கியிருக்கிறது.

இந்த விவகாரத்தில் கொதித்துப் போயிருக்கும் மக்களின் உணர்வுகளைத் தூண்டி விட்டு சவூதி அரேபியாவுக்கெதிராக திருப்பி விட வேண்டுமென்ற குறிக்கோளில் இஸ்லாத்தின் எதிரிகள் மிகக்கச்சிதமாக ஊடகங்களைப்பயன்படுத்தி உண்மைக்குப்புறம்பான தகவல்களை வெளியிட்டு வருவதோடு, பலஸ்தீன விவகாரத்தில் அன்று தொடக்கம் இன்று வரை சவூதி மேற்கொண்டு வரும் அத்தனை முயற்சிகளையும் மூடி மறைத்துச் செயற்படுவதைப் பார்க்கலாம்.

முஸ்லிம்களோடு நட்புறவாடி நயவஞ்சகத்தால் வீழ்த்த நினைக்கும் சில நாடுகள் தங்களை முஸ்லிம்களின் காவலனாக காட்டுவதற்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால், உண்மையில் பலஸ்தீன விவகாரம் உட்பட பல முஸ்லிம் நாடுகளுக்கும், முஸ்லிம்கள் வாழும் நாடுகளுக்கும் தனது செல்வத்திலிருந்து அதிகளவான கொடை கொடுப்பதும், அவர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதிலும், அவர்களுக்கான பிரச்சினைகளின் போது நேரடியாகவும் மறைமுகமாகவும் இராஜதந்திர ரீதியில் தலையீடுகளைச் செய்வதிலும் முஸ்லிம் நாடுகளை ஒன்றிணைத்து சர்வதேச ரீதியாக அழுத்தங்களை உருவாக்கி சாதிப்பதிலும் சவூதிக்கு முதன்மை இடமிருக்கிறது. எனவேதான் சவூதியின் பலத்தை குறைப்பதற்கும் பல சக்திகள் திரைமறைவில் காய் நகர்த்துகின்றன.

சவூதி அரேபியா நாடு என்ற அடிப்படையில் தனது குடிமக்களின் எதிர்காலம் தொடர்பாக அதிக கரிசனை காட்டுவதோடு, உலகில் பரந்து வாழும் முஸ்லிம்கள் தொடர்பிலும் கரிசனை காட்டுகிறது. உலக விவகாரங்களில் வேறு நாட்டு விடயங்களில் தலையீடு செய்யும் போது எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயற்பட முடியாதென்பது நிதர்சனமான உண்மை.

எந்த நாடும் வேறு நாடுகள் தங்கள் விடயத்தில் தலையீடு செய்வதை விரும்பாது. சர்வதேச ரீதியாகவும் தடைகள் இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் குறித்த விவகாரங்களில் தனது நட்பு நாடுகளின் ஆதரவுகளைப் பெற்று சர்வதேச அமைப்புகளின் கவனத்தை குறித்த விடயங்களில் திருப்பி இராஜதந்திர ரீதியான நகர்வுகளினூடாகத்தான் சாதிக்க முடியும்.

பலஸ்தீன விவகாரத்திலும் சவூதியின் செயற்பாடுகளும் பலமான நகர்வுகளாகவே இருக்கின்றது. ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் மனோநிலைக்கு வந்திருப்பதன் பின்னணியில் சவூதியின் வேலைத்திட்டம் இருக்கிறது. பலஸ்தீன மீளெழுச்சியில் நிதி ரீதியாக பெரும் பங்களிப்பையும் தொடராக வழங்கி வருகிறது.

இவ்வாறான மனிதாபிமான உதவிகளை உறவுகளுக்காக வழங்கி வரும் சவூதியின் பணிகளைக் கொச்சைப் படுத்தி விமர்சனம் என்ற ரீதியில் மோசமாக விமர்சிப்பது ஆரோக்கியமானதல்ல.

உணர்வுகளுக்கு அடிமைப்பட்ட சமூகமாக நாம் இருந்து விட்டு, விமர்சித்து விட்டுப்போக முடியாது. இவ்வாறான பிழையான விமர்சனங்கள் மற்றவர்களின் மனங்களில் தப்பான எண்ணங்களைத்தோற்றுவிப்பதோடு, எதிரிகள் தங்களின் இலக்கை எம்மூடாக நிறைவேற்றிக் கொள்ளவும் இடங்கொடுக்கக்கூடாது.

ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள் ஒவ்வொருவரின் பொறுப்புகள் பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவார்கள் என்பதை நாம் நம்பியிருக்கிறோம்,

இஸ்லாம் இவ்வாறான விவகாரங்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென வழிகாட்டியிருக் கத்தக் கதாக சில உலமாக்களும் ஏனை யவர்களும் தவறான கருத்துகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதும் ஆரோக் கியமல்ல. அரபுமொழியை அறியாத வர்கள் என்ன நடக்கிறது எனப்புரியா தவர்கள் ஊடகங்களின் தவறான கதை களை நம்பி விமர்சனம் செய்வது ஆரோக்கியமல்ல என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்னும் சில உலமாக்கள், அறி ஞர்கள் பலஸ்தீன விவகாரம் உட்பட சவூதியின் செயற்பாடுகளையும் அதன் நியாயங்களையும் உண்மைத்தன்மையை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்,

தவறான புரிதல் ஆபத்தானது என்பதையும் யார் உண்மையான முஸ்லிம்களின் நண்பர்? யார் இரட்டை வேடம் போட்டு முஸ்லிம்களை ஏமாற்றுகிறார்கள் என்பதைப்புரிந்து கொள்ள வேண்டும், அறியாமையின் காரணத்தினால் நன்மை செய்வோருக் கெதிராக மற்றவர்கள் பாவம் செய்து விடக் கூடாதென்ற நல்லெண்ணத்தில் இவ்விடயங்களைப்பதிவு செய்து கொள்கிறார்கள்.

நமக்குத்தெரியாத விடயத்தில் போலியான தகவல்களை நம்பி உண்மைக்குப் புறம்பாகப்பேசுவதை விடுத்து நம்மிடமிருக்கும் பலமான ஆயுதமான துஆவை பலஸ்தீன மக்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

சவூதியின் ஆட்சியாளர்கள் இன்னும் இவ்விடயங்களில் கரிசனை காட்டுவதற்கு நல்லெண்ணங்களோடு பிரார்த்தனை செய்வோம். அதுவே மிக ஆரோக்கியமான செயலாக இருக்கும்.

சவூதி அரேபியா தன்னாலான தனியான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் அதே வேளை, சவூதி அரேபியாவை தலைமையாக, தளமாகக் கொண்டியங்கும் பெரும்பான்மையான இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பான “இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு” காசா - இஸ்ரேல் மோதல் தொடர்பான விடயங்களை தீவிரமாகக் கையாண்டு வருகிறது.

இஸ்ரேலைக் கடுமையாக கண்டித்து வருவதுடன், காஸாவில் இடம்பெறும் இஸ்ரேலிய நடவடிக்கைகளை “போர்க் குற்றங்கள்” என்றும் சர்வதேச சட்ட மீறல்கள் என்றும் முத்திரை குத்தி வருகின்றது.

அத்தோடு, கிழக்கு ஜெருசலேமை பாலஸ்தீனத்தின் தலைநகராகக்கொண்ட சுதந்திர பலஸ்தீன் மலர வேண்டும். இடம்பெயர்வை நிராகரித்தல் மற்றும் இஸ்ரேலுக்கெதிரான தென்னாப்பிரிக்காவின் சர்வதேச நீதிமன்றில் இனப்படுகொலை வழக்கை ஆதரித்தும் வருகின்றது.

அத்துடன், மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வருவதுடன், மனிதாபிமான உதவி வழங்குமாறு ஏனைய நாடுகளையும் வலியுறுத்துதல், காஸாவின் முற்றுகையை நீக்குதல் மற்றும் பாலஸ்தீன அதிகார சபை நிர்வாகத்தின் கீழான காசாவிற்கு $53 பில்லியன் மதிப்புள்ள அரபு மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளல்.

அத்துடன், இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்து அவசரக்கூட்டங்களை நடத்துதல் மற்றும் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் செயலற்ற தன்மையை விமர்சித்தல் என கூட்டாகவும் தனியாகவும் சவூதி அரேபியா பல்வேறு பணிகளை பல சவால்களை எதிர்கொண்டு மேற்கொண்டு வருவதை மறுதலிக்க முடியாது.

அத்துடன், மத்திய கிழக்கிலுள்ள ஐக்கிய அரபு இராஜ்ஜியம், கட்டார் போன்ற ஏனைய நாடுகளும் தம்மாலான பல்வேறு இராஜதந்திர, மனிதாபிமான முயற்சிகளை, உதவிகளை முன்னெடுத்தே வருகின்றன.

இது அரபு நாடுகளுக்கு வக்காலத்து வாங்கி துதிபாடுவதாக அல்லாமல் யதார்த்தங்களைப் புரிந்து கொள்வதற்கான பதிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அங்கீகாரத்தில் பாலஸ்தீனம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பாலஸ்தீனம் ஐநாவில் முழுமையாக அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது. பல தசாப்த போராட்டங்களின் பின்னர் உலகமெங்கும் பாலஸ்தீன ஆதரவுக் குரல், ஒரு தேச அங்கீகாரமாக மாறி வருகிறது. மேற்குலக வரலாற்றில் பிரான்ஸின் முதல் அங்கீகார நகர்வு பாலஸ்தீன மக்களின் தேசக் கோரிக்கையை மற்றய சர்வதேச நாடுகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தம் மேற்குலக நாடுகளின் மேலாக இருந்தாலும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பாலஸ்தீன அங்கீகாரம் வலுப்பெற்று வருகிறது. இஸ்ரேலும் பாலஸ்தீனமும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என அமெரிக்கா கூறுகிறது. ஆனால் இதன் விளைவாக பாலஸ்தீனம் தனி நாடாவதைத் தடுக்கும் அதிகாரம் இஸ்ரேலுக்கு வழங்கப்படுவதுதான் இறுதியில் மிச்சம் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலின் காசா மீதான கொடும் போர் மனிதாபிமான கேள்விகளைத் தீவிரமாக உலகெங்கும் எழச் செய்துள்ளது.

அண்மையில் பிரான்ஸ் முதல் ஜி 7 நாடாக, ஐநாவில் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்போம் எனத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து பிரித்தானியா, அவுஸ்திரேலியா, தற்போது கனடாவும் இதே முடிவை எடுத்துள்ளது. சீனா, ரஷ்யா ஆகியவை ஏற்கனவே தனித் தேசமாக அங்கீகரித்துள்ளன.

**ஐநாவில் பாலஸ்தீன அங்கீகாரம்:**

ஐநாவில் உறுப்பினராக உள்ள 193 நாடுகளில் 140க்கும் மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்துள்ளன. என்றாலும் இஸ்ரேலுக்கு வரையறையற்ற ஆதரவு வழங்கும் அமெரிக்காவும், அதன் உறவு நாடுகளான ஜப்பான், கொரியா போன்ற நாடுகளும் பாலஸ்தீனத்துக்குத் தனி நாடு அங்கீகாரம் வழங்குவதை எதிர்த்து வருகின்றன.

ஐநாவில் ஒரு நாடு அங்கீகரிக்கப்படப் பாதுகாப்பு கவுன்சிலின் ஒப்புதல் அவசியம். பாலஸ்தீனம் 2011ம் ஆண்டே தனி நாடாக அங்கீகாரம் பெற விண்ணப்பித்திருந்தாலும் தொடர்ந்து அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வருகிறது.

ஐநாவில் தற்போது பாலஸ்தீனம் பார்வையாளராக உள்ளது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உட்படப் பல சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராக உள்ளது. 2024 பாலஸ்தீனம் விவாதங்களில் பங்கேற்கவும் தலைப்புகளை முன்மொழியவும் உரிமை வழங்கப்பட்டது. ஆனாலும், விவாதங்களில் வாக்களிக்கும் உரிமை கிடையாது.


2024ல் இதுகுறித்த விவாதத்தில் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி பாலஸ்தீனத்தின் அங்கீகாரத்தைத் தடுத்தது அமெரிக்கா. அவுஸ்திரேலியாவும், இங்கிலாந்தும் இன்னும் சில நாடுகளும் ‘இரண்டு அரசு’ தீர்வை முன்வைத்தாலும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீண்ட காலமாக தயங்கி வந்தனர்.

இஸ்ரேலின் பார்வையில் பாலஸ்தீனத்துக்குத் தனி நாடு அந்தஸ்து கொடுப்பது, இஸ்ரேல் தனது பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே கருதுகிறது. தற்போது கனடா, பிரான்ஸ், பிரித்தானியா நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதை, ‘2023 அக்டோபர் தாக்குதலுக்குக் கொடுக்கப்பட்ட பரிசு” எனவும் இஸ்ரேலிய அரசு கடுமையாக எச்சரித்துள்ளது.

**பிரான்சின் முதல் அங்கீகாரம்:**


அமைதி சாத்தியமாக, உடனடியாக காசாவில் போர் நிறுத்தம் தேவை. அனைத்து பணயக் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். காசாவுக்குப் பெரிய அளவிலான மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மாக்ரோன் தெரிவித்துள்ளார். எதிர்வரும் செப்டம்பர் 2025ல் நடைபெறும் ஐநா பொதுக் கூட்டத்தின் 80வது அமர்வில் அதிகாரப்பூர்வமாக பிரான்ஸ் பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரிக்கும் எனவும் கூறியுள்ளார்.

பிரிட்டனிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரிக்க வேண்டுமென அரசுகளுக்கு அழுத்தம் பாரியளவில் கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே பிரான்ஸின் முடிவை அமெரிக்காவும் இஸ்ரேலும் கடுமையாகக் கண்டித்துள்ளன.





## இஸ்ரேலுடன் முரண்படும் மேற்குலகு?



**இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனியாதிக்க வல்லரசாக இருந்த பிரித்தானியா உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஒரு தேசிய இனத்தை, தனியாக பிரிந்து செல்ல அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிரித்தானியாவின் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் முடிவு ஐரோப்பிய வரலாற்றில் பெரும் திருப்பு முனையாகவே கருதப்படுகிறது.**



**பிரிட்டனின் பாலஸ்தீன அங்கீகார முடிவு:**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனியாதிக்க வல்லரசாக இருந்த பிரித்தானியா உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஒரு தேசிய இனத்தை, தனியாக பிரிந்து செல்ல அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிரித்தானியாவின் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் முடிவு ஐரோப்பிய வரலாற்றில் பெரும் திருப்பு முனையாகவே கருதப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கனடாவும் பாலஸ்தீன அங்கீகாரத்தை வலியுறுத்தி வருகிறது. அவுஸ்திரேலியா தாமதிக்காது பலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் எனவும், இனியும் தாமதித்தால் அவுஸ்திரேலியா உலக அரங்கில் ஒரு பிற்போக்குத்தனமான நாடாகவே கருதப்படும் என்றும் உள்நாட்டில் கான்பரா தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் மனிதாபிமான நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் பாலஸ்தீன நாட்டை அங்கீகரிப்பதாக பிரதமர் கெயர் ஸ்டார்மர் எச்சரித்துள்ளார்.

காசாவில் நிலவும் மோசமான நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் அரசு தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடருக்கு முன்னதாக செப்டம்பரில் பாலஸ்தீனத்தை அரசாக பிரித்தானிய அரசு அங்கீகரிக்கும் என பிரதமர் கெயர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார். மேலும் இந்த அறிவிப்பு, இஸ்ரேல் மீது அழுத்தம் ஏற்படுத்தும் முக்கியமான மாற்றமாகக் கருதப்படுகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் போரால் காசாவில் ஏற்பட்ட மனிதாபிமான பேரழிவுக்கும், 60,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களின் உயிரிழப்புக்கும் பதிலாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

காசாவில் பசியால் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், பலர் பசியால் தவிப்பதாகவும் பலர் இறந்து வருவதாகவும் பிரித்தானிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த கொடிய வேதனை மிகுந்த நிகழ்வுகள் முடிவடைய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காசாவுக்குள் அதிக உதவிகளை அனுமதிக்க வேண்டும் என்றும், மேற்கு கரையைக் கைப்பற்றி, யூத குடியேற்றங்களை பலப்படுத்த கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் இருநாட்டுத் தீர்வு நோக்கி நிலையான அமைதி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் இஸ்ரேல், இந்த அறிவிப்பை ஹமாஸுக்கு விருது வழங்குவது போலும், அமைதி முயற்சிகளை பாதிக்கும் என்றும் எச்சரிக்கை செய்து விமர்சித்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் கெயர் ஸ்டார்மர், முன்னர் அமெரிக்க அணுகுமுறையுடன் இணைந்து இருந்தாலும், இப்போது புதிய அரசியல் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாறுபாடு கொண்டுள்ளமை தெரிகிறது.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் பிரிட்டன் முடிவானது, காசா முனையில் இஸ்ரேல் ராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டு வருகின்ற நிலையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கொடூர தாக்குதல்களில் பொதுமக்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியோர் என பலரும் பாதிக்கப்பட்டு, கொல்லப்பட்டு வருகின்றனர்.

**பாலஸ்தீன தனி நாடாக கனடா ஆதரவு:**

பாலஸ்தீனத்தை தனி நாடாக கனடா ஏற்றுக்கொள்ளும் என கனடா பிரதமர் மார்க் கார்னியும் அறிவித்துள்ளார். இதன்மூலம், அண்மையில் இந்த முடிவை எடுக்கும் மூன்றாவது ஜி7 நாடாக கனடா திகழ்கிறது.

ஜனநாயக சீர்த்திருத்தங்களை பாலஸ்தீன தேசிய ஆணையம் முன்னெடுக்க வேண்டும். ஹமாஸ் பங்கேற்பு இல்லாமல் அடுத்த ஆண்டு தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற நிபந்தனைகளை கனடா பிரதமர் மார்க் கார்னி விதித்துள்ளார். 200க்கும் மேற்பட்ட முன்னாள் கனடிய தூதர்களும், பாலஸ்தீன அங்கீகாரத்தை ஆதரித்து கார்னிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

காசாவில் மனிதர்கள் வதைப்படுவது சகிக்க முடியாத அளவில் உள்ளது. அது மேலும் மேலும் மோசமடைந்தும் வருகிறது. அதே நேரத்தில், பாலஸ்தீனத்தை நிர்வகித்து வரும் பாலஸ்தீன தேசிய அணையம், தனது ஆட்சி முறையை திருத்தி, ஆயுதமில்லா நிலைமைக்கு உடன்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் பிரதமர் கார்னி விதித்துள்ளார்.

பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அபாஸுடன் அதன் நிலை பற்றி பிரதமர் கார்னி பேசியதாகவும் தெரிவித்துள்ளார். தற்போதைய பாலஸ்தீன அரசு மேற்கு கரையை கட்டுப்படுத்தும் பத்தாஹ் கட்சியின் கீழ் இயங்குகிறது. காசா பகுதியில் ஹமாஸ் ஆதிக்கம் செலுத்துகிறது. 2006 இற்குப் பிறகு இந்த பகுதிகளில் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கனடா எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி அரசின் இந்த முடிவை எதிர்த்துள்ளது. அக்டோபர் 7 இல் நடந்த பயங்கரவாத நடவடிக்கைக்குப் பிறகு பாலஸ்தீனை அங்கீகரிப்பது தவறான சமிக்ஞையை உலகுக்கு தருவதாக அக்கட்சி கூறி உள்ளது.

**காசாவில் பட்டினிக் கொடுமை:**

காசாவில் இந்த ஜூலை மாதத்தில் மட்டுமே 156 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். பலரும் வாரக் கணக்காக தண்ணீர் அருந்தாமல், பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். உணவு, தண்ணீர் தேடிச் செல்லும் பலர் இஸ்ரேல் ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் நீர் நிலைகளில் இஸ்ரேல் ராணுவம் அத்துமீறி நுழைந்து அழித்து வருகிறது. காசாவில் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் இஸ்ரேலிய இராணுவம் தடுத்து வருகிறது.

காசாவில் பட்டினிச் சாவை நோக்கிய எலும்பும் தோலுமான பாலஸ்தீன குழந்தைகளின் புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு நெஞ்சை உலுக்குகின்றன. உலகம் முழுவதிலும் பாலஸ்தீன மக்களுக்கான ஆதரவுக் குரல் ஒலிக்கிறது. மேலும் இதன் விளைவாக சர்வதேச நாடுகள் பாலஸ்தீன தனி நாட்டை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ பண்புள்ள பிள்ளைகளை புதிய கல்விச் சீர்திருத்தம் உருவாக்கும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய நம்பிக்கை

கொழும்பு, ஒக. 03

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் மூலம் தலைமைத்துவ பண்புள்ள பிள்ளைகளை உருவாக்குவதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இன்றைய சமூகத்தில் பெண்கள் வகிக்கின்ற முக்கிய பங்கு மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் பெண் தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, அதனை நிறைவேற்றும் திறன் இலங்கை பெண் வழிகாட்டிச் சங்கத்திடம் உள்ளதெனவும் பிரதமர் கூறினார்.

உலகின் மிகப்பெரிய பெண்களுக்கான தன்னார்வ அமைப்பின் ஓர் அங்கமான இலங்கை பெண் வழிகாட்டிச் சங்கத்தால், வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜனாதிபதி பெண் வழிகாட்டி விருது' வழங்கும் விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் ஒரு பெண் வழிகாட்டி பெறக்கூடிய மிக உயர்ந்த கௌரவ விருதான 'ஜனாதிபதி பெண் வழிகாட்டி விருது' 306 பெண் வழிகாட்டிகளுக்கு வழங்கப்பட்டன.


இதேவேளை, 'பிரதமர் பெண் வழிகாட்டி விருது' 18 பேருக்கு வழங்கப்பட்டன.

விழாவில் உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியதாவது:

"இலங்கை பெண் வழிகாட்டிச் சங்கத்தால் வழங்கப்படும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் விருது வழங்கும் விழாவில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1917 ஆம் ஆண்டில் கண்டியில் உள்ள மகளிர் உயர்தரப் பாடசாலையில் தொடங்கிய இந்த இயக்கம், இப்போது நாடு முழுவதும் பரவியுள்ளது.

இதன் மூலம், 8 வயது முதலே பெண் குழந்தைகள் நாட்டுக்குத் தலைமை தாங்குவதற்குத் தேவையான வலுவான மற்றும் முழுமையான ஆளுமையை வளர்த்து, பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல்மிக்க



சிறுமிகளாக உருவாவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

நமது நாட்டுக்கு இதுபோன்ற வலிமையான எதிர்கால தலைமுறையே தேவை. இந்த விருது பெறுபவர்களின் அர்ப்பணிப்பும் அவர்களின் வெற்றிக்குப் பின்னால் இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் மற்றும் வழிகாட்டித் தலைவர்களின் ஆதரவும் மிகவும் பாராட்டத்தக்கது.

நான் உங்களிடம் பிரதமர் என்ற முறையில் மட்டுமல்லாது, என் சிறுவயதில் ஒரு 'சிறிய சிநேகிதியாக' இந்த இயக்கத்தில் இணைந்த ஒருவராகவும் பேசுகிறேன். அப்போது நான் பெற்ற அனுபவங்கள், எனது பயணம் முழுவதும் எனக்கு வழிகாட்டியாக இருந்துள்ளன.

இந்த இயக்கம் பெண்களுக்குத் தன்னம்பிக்கையையும், தலைமைத்துவப் பண்புகளையும் அளித்து, ஒவ்வொரு பெண்ணும் நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பதற்கான சூழலை உருவாக்குகிறது. இது போன்ற இயக்கங்களிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது இது தான்.

அதேபோன்று, எமது அரசாங்கம் செயல்படுத்தி வரும் கல்விச் சீர்திருத்தங்களின் மூலமும் இதுபோன்ற பிள்ளைகளை உருவாக்குவதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்"- என்றார். (எ)

# யுவதிகளை இலக்கு வைத்து போதை மாத்திரை விற்பனை

பதுளை, ஒக. 03

பதுளை, வெலிமடை பிரதேசத்தில் இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் திருமணமான தம்பதி ஒன்றும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் வெலிமடை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்களான தம்பதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தம்பதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஏனைய 5 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 620 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மாகாண சபைகள்:...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட இப்போது உள்ளதே போதுமானது எனக்கருதுவதையும் காணமுடிகிறது.

இவை யாவற்றையும் கடந்து இன்றைய நிலையில் முக்கியம் பெறுவது மாகாணசபை தொடர்பாகத் ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தியின் தற்போ தைய நிலைப்பாடு என்ன என்பதை பற்றி யதாகும். தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பியின் ஜனரஞ்சகப் பதிப்புத்தான். உள்ளடக்கத்தில் பெரிய மாற்றங்கள் இல்லை. ஆனால் எடுத்துக் கூறும் விதம் மட்டும் வேறானது. தமிழர்களுக்கு அரசியல் பிரச்சினை என்று எதுவுமில்லை. அவர்களுக்கு இருப்பதெல்லாம் பொரு ளாதார,சமூகப் பிரச்சினைகள் மட்டுமே என்ற சித்தாந்தைக் கொண்டவர்கள். மாகாண சபை முறைமை முன்மொழியப் பட்டபோது அதற்கெதிராகக் கிழர்ந்தெழுந்து தெற்கில் இரத்த ஆறு ஓடச்செய்த சிவப்புச் சட்டைக்காரர்கள் அவர்கள். அந்தவகையில் அவர்கள் மாகாண சபை முறைமை வேண்டவே வேண்டாம் என்ற நிலைப்பாட்டைச் சேர்ந்தவர்கள். மாகாண சபைகள் அவசியமானவை என்றோ அதற் கான தேர்தல் அவசியமானதென்றோ கருதும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பதைத் துணிந்து கூறமுடியும். அவை அவசியம் என்று அவர்கள் கருதியிருந் தால் காலவரைமுறையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு முதல் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தியிருக்க வேண்டும். இப்போது கூட மாகாணச பைத் திருத்தச் சட்டத்தை கைவாங்குவதற்கான தனிநபர் பிரேரணை ஒன்று தமி ழரசுக் கட்சி நாடாளுமன்று உறுப்பின ரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதுபோன்ற மேலும் ஒரு பிரேரணையைக் கொண்டுவர அரசாங்கம் ஏன் முயல்கிறது என்ற ஐயத்தையே ஏற்படுத்துகிறது.

அரசாங்கம் விரும்பும் புதிய அரசியலமைப்பு அதன் ஆட்சிக்காலத்தின் இறுதிக் கந்தாயத்தில் வரும் என எதிர்வு கூறமுடியும். அதில் நிச்சயமாக இல்லாமல் போகும் என நம்பக்கூடிய விடயங்கள் இரண்டு. ஒன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை. இரண்டாவது மாகாண சபை முறை. புதிய அரசியலமைப்பு வரும்வரை தற்போதைய மாகாணசபை முறை தொடரும் என தேசிய மக்கள் சக்தித் தலைவர்கள் தெளிவாகவே சொல்லிவிட்டனர். அதன் மூலம் அதன்பின் மாகாணசபை முறை இருக்காது என்பது அவர்கள் சொல்லும் விடயம். அவர்கள் சொல்லாத விடயம் மாகாணசபைக்குப் பதிலாக அதில் எதுவுமே இருக்காது என்பது தான். இதுவும் தமிழர் தரப்பில் இருப்பதைக் காப்பாற்ற வேண்டும் எண்ணம் வலுப்பெறுவதற்கான காரணங்களில் ஒன்று.

தேசிய மக்கள் சக்தி தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்காக தனது அடிப்படைக் கொள்கைகளைத் தவிர்க்க முடியாத வகையில் தியாகஞ் செய்து நடைமுறை ஒழுங்குகளுடன் ஒத்துப்போவதற்கான பல சமரசங்களைத் தற்போது செய்துவருகிறது. அந்தவகையில் மாகாண சபை தொடர்பான அதன் அடிப்படை கருத்து நிலையிலும் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படலாம் எனச் சிலர் நம்புகின்றனர். சர்வதேசத்தின் ஆதரவும் இந்த அரசாங்கத்துக்கு அவசியமாக இருப்பதால் அதை நோக்கி அவர்கள் நகரக்கூடும் என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் அவர்களுக்கான சிங்கள மக்களின் ஆதரவு என்பது மாகாண சபைமுறைமையை ஒழிப்பதில்தான் அதிகமிருக்குமென்பதால் தற்போதைய மாகாணசபைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும். அந்தவகையில் மாகாண சபைகளுக்கான தேர்தலையை இயன்றவரை தவிர்ப்பதற்கே ஆட்சியிலுள்ள தோழர்கள் முயல்வார்கள். அந்தவகையில் தமிழர் தரப்பில் வேண்டவே வேண்டாம் என்பதற்கு ஆதரவு அதிகமிருக்காது என்றாலும் அதற்குத் தெற்கில் மனக் ஆதரவு இருக்குமென்பதே உண்மை.

# பிரதேச சபையின் தவிசாளர் பயணித்த வாகனம் விபத்து!

களுத்துறை,, ஒக. 03

தொடங்கொட பிரதேச சபையின் தவிசாளர் நிலுஷ கவிரத்ன பயணித்த கப் ரக வாகனம் களுத்துறை, கரன்னாகொட பிரதேசத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலை விபத்துக்குள்ளாகியுள்ளதாக வரக்காகொட பொலிஸார் தெரிவித்தனர்.

கப் ரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் பயணித்த லொறி ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தொடங்கொட பிரதேச சபையின் தவிசாளர் நிலுஷ கவிரத்ன தனிப்பட்ட தேவைக்காக வரக்காகொட பகுதியிலிருந்து கப் ரக வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது தவிசாளர் நிலுஷ கவிரத்னவுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கப் ரக வாகனத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வரக்காகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பைப் போன்றே தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளையும் முன்னெடுப்பதே புதிய அரசியலமைப்பு முயற்சியின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால், புதிய அரசியலமைப்பு நாட்டில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரப் போவதில்லை என்பது நிச்சயமானது.

தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஜே.வி.பியின் முன்னாள் செயலாளரான லயனல் போபகே கடந்த வாரம் 'இலங்கைக்கு புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்றில் கூறியிருக்கும் முக்கியமான சில கருத்துக்களை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

'தற்போதைய அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் சிலவற்றை உறுதி செய்கின்ற போதிலும், சிங்களம் தமிழை விடவும் மேலானதாகவும் பௌத்த மதம் மற்றைய மதங்களை விடவும் முதன்மையானதாகவும் பார்க்கப்படுகிறது. சிறுபான்மைச் சமூகங்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யாத இந்த அரசியலமைப்பு இனங்களுக்கு இடையில் பிளவுக்கும் இன மோதல்களுக்கும் வழிவகுத்தது.

'புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன் முறையை பரந்தளவிலான பொதுக் கலந்துரையாடலுடன் தொடங்க வேண்டும். சகல இனங்களையும் சேர்ந்த மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிப்பதாக அரசியலமைப்பு அமைய வேண்டும்.

'13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மாத்திரமல்ல, அதையும் தாண்டிச் செல்ல வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் ஆட்சிமுறையில் சகல சமூகங்களின் பங்கேற்பையும் உறுதி செய்வதற்கான ஒரு வழிமுறையே தவிர, தேசிய ஒருமைப்பாட்டுக்கான அச்சுறுத்தல் அல்ல. அதிகாரப் பரவலாக்கத்தை பிரிவினைவாத நோக்கம் கொண்டதாக சிங்களப் பகுதிகளில் பலர் கருதுகிறார்கள். ஆனால், உண்மையில் அது கல்வி, சுகாதாரம், நிலம் மற்றும் நிருவாகம் போன்ற துறைகளில் மக்கள் தாங்களாகவே தீர்மானங்களை எடுக்க வழிவகுக்கும் ஒரு ஏற்பாடாகும்.

'அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை தனது பதவிக்காலத்தின் பிற்பகுதியில் முன்னெடுப்பது குறித்து அரசாங்கம் தெரிவித்தது. ஆனால், தாமதமான தொடக்கம் தோல்விக்கே வழிவகுக்கும் என்பதை வரலாறு எங்களுக்கு கற்றுத்தந்திருக்கிறது. தேர்தல்கள் நெருங்கும்போது அரசியல் துணிவாற்றல் இல்லாமல் போய்விடும். முன்னர் அவ்வாறு நடந்தது. மீண்டும் அதேநிலை ஏற்படக்கூடாது.

'இலங்கையை நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துவதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்திருக்கிறது. சகல சமூகங்களையும் அரவணைக்கின்ற புதியதொரு ஜனநாயக சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் அதில் பங்கு பற்றுவதாக உணரக்கூடிய முறையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இது எளிதான செயன்முறை அல்ல.

இலங்கையில் அமைதியும் சமூகங்கள் பரஸ்பர மதிப்புடன் வாழ்கின்ற சூழ்நிலையும் ஏற்பட வேண்டுமானால், நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். இது தொடக்க ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி...

எந்தப் பாடசாலையும், எந்த மாகாணமும் பின்தங்கியிருக்காத எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதற்கான அர்ப்பணிப்புக்கான உங்கள் செய்தி மிகப் பெரியது.

இன்று, வடக்கு மாகாண மாணவர்களுக்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் நம்பிக்கையைத் தரும் ஒரு துணிச்சலான கல்வி சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் உங்கள் தொலைநோக்குத் தலைமையை நாங்கள் பாராட்டுகின்றோம்.

ஒவ்வொரு மாணவனும் தங்கள் கல்வியை முடிக்கவும், அவர்கள் விரும்பும் எதிர்காலத்தைத் தொடரும் வாய்ப்புக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலான ஒருங்கிணைந்த தொழில் மற்றும் கல்விப் பாதைகளுடன் கல்வி முறையை மறுசீரமைத்தல் சிறப்பானது.

பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகளை பரீட்சைப்புள்ளிகளுடன் சமநிலைப்படுத்தும் மிகவும் நெகிழ்வான மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்துவது, மாணவர்கள் மீதான தேவையற்ற போட்டி மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.

எண்ணிமப்படுத்தலை (டிஜிற்றல் மயமாக்கல்) புகுத்துவதன் மூலம் வடக்கு மாகாணம் போன்ற கல்வி இடைவெளிகள் அதிகமாகவுள்ள மாகாணங்கள் மிகப்பெரிய நன்மையடையும்.

இந்தச் சீர்திருத்தங்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அவை கொள்கை மாற்றங்களை மட்டும் பிரதிபலிக்கவில்லை. நீதி, உள்ளடக்கம் மற்றும் சமமான வளர்ச்சிக்காக நீண்ட காலமாக காத்திருக்கும் சமூகங்களுக்கான நம்பிக்கையை பிரதி நிதித்துவப்படுத்துகின்றன, என்றார் ஆளுநர்.

இங்கு உரையாற்றிய பிரதமர் அவர்கள், இந்தக் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்திய வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அவர்தம் நிர்வாகக் கட்டமைப்பினருக்கு முதலில் நன்றிகளைக் கூறுகின்றேன்.

கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் வலிகள் நிறைந்த காலத்திலும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் நீங்கள். வடக்கு மாகாணம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறு பேறுகளில் பின்னடைவைச் சந்தித்திருக் கின்றது. ஏன் இந்த நிலைமை என்று சிந்திக்க வேண்டும்.

தற்போதுள்ள கல்வி முறைமை எல்லோருக்கும் சமனானதாகத் தெரியவில்லை. பணம் சார்ந்த சுமைகளை பெற்றோருக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. பரீட்சை மையக் கல்வியானது மாணவர்களை முடக்கியுள்ளது. எனவே, அவசியமான இந்தக் கல்விச் சீர்திருத்தம் கட்டம் கட்டமாகவே மேற்கொள்ளப்படும். 2026ஆம் ஆண்டு தரம் ஒன்று மற்றும் தரம் ஆறு வகுப்புகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும். - என்றார். (அ)

## நீதிவான்...

நீதிவானுக்கு அறிவித்தது.

முன்னதாக, சட்டவிரோதமான யானை வைத்திருந்தமை தொடர்பில் அவருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த ஜூன் மாதம், நீதிச்சேவை ஆணைக்குழு, திலின கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

மோசடியாகப் பெறப்பட்ட அனுமதியைப் பயன்படுத்தி "சகுரா" என்ற குட்டி யானையை வைத்திருந்ததன் மூலம் பொதுச்சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டி, சட்டமா அதிபர் அவருக்கு எதிராக 25 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்தார்.

யானை குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்தது தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

இந்தநிலையில், 2015 ஆம் ஆண்டு மே மாதம், குறித்த யானை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## புதிய...

தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமர சூரிய தெரிவித்தார்.

புதிய கல்வி சீர்திருத் தம் குறித்து வடக்கு மாகாண கல்வி அதிகாரி களுக்கு தெளிவுபடுத்து வதற்காக நேற்று வடக்கு மாகாண செயலக கேட் போர் கூடத்தில் நடை பெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய இவ்வாறு கூறினார்.

மேலும் பேசிய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய,

புதிய கல்வி சீர்திருத்தத்தில், ஒரு மாகாணம், மாவட்டம் அல்லது பிராந்தியம் மட்டுமல்ல, ஒவ்வொரு மாகாணம், மாவட்டம் மற்றும் பிராந்தியமும் முக்கியமானது. சமத்துவம் அங்கிருந்து தொடங்குகிறது. நம் நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சம வாய்ப்புகளை வழங்க விரும்பினால், அனைத்து வளங்களையும் ஒரு பிராந்தியத்திற்கு, ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்க முடியாது. அது நியாயமாக விநியோகிக்கப்பட வேண்டும்.

அங்கு, கடினமான மற்றும் வளம் குறைவாக உள்ள பகுதிகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். கடினமான பாடசாலைகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தீர்வுகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அனைத்து பாடசாலைகளிலும் டிஜிட்டல் வசதிகள், கற்றல் வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், சுகாதார வசதிகள், தண்ணீர், விளையாட்டு மைதானங்கள், ஆய்வகங்கள், புதுமை இடங்கள் மற்றும் அழகியல் அலகுகள் வழங்கப்பட வேண்டும்.

அதற்கான நல்ல திட்டம் எங்களிடம் உள்ளது. அதற்காக, இந்த பொது விவாதத்தை நாங்கள் நடத்துகிறோம். ஏனெனில் இது கல்வி அமைச்சகம் அல்லது ஹரிணி அமரசூரிய அல்லது ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் சீர்திருத்தம் அல்ல. இது இலங்கையில் தேசிய கல்வியின் சீர்திருத்தம். நாம் அனைவரும் இதைப் பற்றி ஒரு யோசனை பெற வேண்டும். நாம் அனைவரும் இதில் ஈடுபட வேண்டும்.

கல்வி சீர்திருத்தம் பற்றிய உரையாடலை உருவாக்குங்கள். ஆசிரியர் சங்கங்களுடனும், நிபுணர்களுடனும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும் நாங்கள் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம். நாங்கள் தொடர்ந்தும் அவ்வாறு செய்வோம்.

பெற்றோர்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் துறையினரும் இதில் ஈடுபட வேண்டும் - என்றார். (அ)

## அரியாலையில்...

சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் விடுக்கப்பட்டுள்ள கட்டளையை மேற்கோள் காட்டி கருத்து தெரிவிக்கும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

செம்மணியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் பின்னணியிலுள்ள இனப்படுகொலைச் சம்பவங்களை எண்பிப்பதற்கு, அங்கு நடைபெற்றுவரும் அகழ்வுப்பணிகளில் மீட்கப்பட்ட தடயப்பொருட்கள் உரியவர்களின் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட வேண்டும்.

ஆகவே, தடயப்பொருட்களை இனங்காட்ட வேண்டியதன் அவசியம் உணர்ந்து, தங்களின் உறவுகளும் செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், எதிர்வரும் 05ஆம் திகதி மாலை 1.30 மணி முதல் 5.00 மணிவரை யாழ்ப்பாணம் சித்துப்பாத்தி இந்துமயானத்தருகில் காட்சிப்படுத்தப்படும் தடயப்பொருட்களை அடையாளம் காட்ட வருகைதந்து, இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைக்கு வலுச்சேர்க் குமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

## அரியாலை...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், இந்தச் சான்றுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அதன்படி, எதிர்வரும் 05ஆம் திகதி பிற்பகல் 1:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை, அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இப்பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, செம்மணி புதைகுழிகளில் இதுவரை மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களில் புத்தகப் பைகள், சிறுவர்ளின் காலணிகள், குழந்தையின் பால் போத்தல், வளையல்கள் உள்ளிட்ட 54 பொருட்கள் அடங்குவதுடன் இவை தற்போது நீதிமன்றக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களை அடையாளம் காணக்கூடியவர்கள், நீதிமன்றத்துக்கு அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு தகவல் தெரிவித்து, விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## தமிழ் தேசிய...

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வும், அரசியல் விடயங்களைக் கையாள்வதற்கு மத்திய செயல் குழு வினாலே நியமிக்கப்பட்ட ஏழுபேர் கொண்ட குழுவும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று பகல் ஓர் விசேட கலந்துரையாடலை நடத்தினர்.

இதன் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்னொரு தரப்புத் தயாரித்து எமது மேசையில் வைத்த ஆவணத்தில் நாம் கையொப்பம் இடவில்லை. நாம் அதைவிட தீர்க்கமாகப் பல விடயங்களை ஆராய்ந்து - சொல்ல வேண்டிய முறையில் - சொல்ல வேண்டிய தருணத்தில்- தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம்செய்யும் பிரதான கட்சி என்ற வகையில்அதை வெளிப்படுத்துவோம்." - என்றார் அவர்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு தொடர்பில், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில், கலந்துரையா டினோம். இந்த அரசாங்கம் பதவிக்கு வரும்போது புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு ஒன்று முன் வைப்போம் என்ற வாக்குறுதியுடன் வந்திருக்கின்றார்கள்.

ஆனால் தற்போது வரை அது குறித்துப் பேச்சு ஏதும் அரசுப் பக்கத்தில் இருந்து கிடையாது. சென்ற வாரம் பிரதமர் ஏதோகூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்குவது தொடர்பிலும் எமது கவனத்தைச் செலுத்துவோம். ஏனெனில் ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் இந்த விடயத்திற்காக எம்மோடு இணைந்து செயல்பட்டனர். மாற்றுச் சட்டங்களை முன்னைய அரசாங்கங்கள் கொண்டுவந்த போது மாற்று எதுவுமே தேவையில்லை என அவர்கள் வாதிட்டனர்.

ஆனால் தற்போது மாற்றுச் சட்டம் குறித்துப் பேசுகின்றனர். எனவே நாம் இதை கடுமையாக எதிர்க்கின்றோம். புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசுஉடனடியாக தனது தீர்வை முன் வைக்கவேண்டும். அதுவரை மாகாண சபைகள் இருக்கின்றபடியே இயங்குவதற்கு நாங்கள் ஏது செய்வோம் என எமது அலுவலக வாசலில் வைத்து ஜனாதிபதியாக முன்னர் அநுரகுமார திஸநாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதனை துரிதமாக - காலத்தை இழுத்தடிக்காது செய்ய வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலுக்குத் தடையாக உள்ள சட்ட திருத்தத்தை மேற்கொண்டு அதனை நிறைவேற்றவேண்டும். - என்றார். (அ)

## ஒழுங்கையில்...

திருப்பியுள்ளார்.

இரவு நேரம் என்பதனால், குறித்த ஒழுங்கையில் இளைஞன் படுத்திருப்பதை அறிந்திருக்காத நிலையில் வாகனம் இளைஞன் மீது ஏறியுள்ளது.

இன்று காலையிலே, குறித்த இளைஞன், வாகனத்துள் நசுங்கி உயிரிழந்துள்ள நிலையில் மைத்துனர், நெடுங்கேணிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (அ)

## பயங்கரவாத...

"பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக புதிய சட்டத்தைக் கொண்டு வரும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்" என அவர் குறிப்பிட்டார். (அ)

## சித்துப்பாத்தி....

பிறப்பித்துள்ளது. குறித்த சான்று பொருட்கள் மீண்டும் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் 45 நாட்களின் பின்னர் அகழ்வுப் பணியில் முடிவடைந்ததும் பிறிது ஒரு நாள் ஒதுக்கப்பட்டு சான்று பொருட்களை காண்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மன்று கட்டளை பிறப்பித்தது.

மேலும் நீதிமன்றம் அது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையை கூறப்பட்டுள்ளதாவது-

1.சான்று பொருட்களை காட்சிப்படுத்து நடவடிக்கை ஒரு நீதிமன்றத்திற்கு உட்பட்ட நடவடிக்கையாக காணப்படுகின்றமையால் நீதிமன்ற நடவடிக்கைக்குரிய கண்ணியம் இதில் பங்கேற்கும் நபர்களால் பேணப்பட வேண்டும்.

2. காணாமல் ஆக்கப்பட்டு தொடர்பாக முறைப்பாடு செய்த நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள் தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பான ஆவணம் ஒன்றை சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில் முற்படுத்தப்படும் தரவுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

3.மேற்படி நடவடிக்கைகளில் பங்குபற்றும் நபர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படும்.

4. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

5. பங்குபற்றும் நபர்கள் மேற்படி நீதிமன்ற நடவடிக்கைகளையோ அல்லது காண்பிக்கப்படும் பொருட்களையோ ஒலி, ஒளிப்படங்களை பதிவு செய்வதற்கும் எந்த ஒரு இலத்திரனியல் உபகரணங்களை எடுத்து வருவதற்கும் தடை விதிக்கப்படுகிறது.

6.மேற்படி நடவடிக்கையில் பங்குபெற்றும் காணாமல் போனது உறவினர்கள் சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங்குகின்றது.

7. இது ஒரு நீதிமன்ற நடவடிக்கையாக காணப்படுவதனால் இங்கு காட்சிப்படுத்தப்படும் உடைகள் உள்ளிட்ட ஏனைய சான்று பொருட்களை தொட்டுப் பார்ப்பதோ, கையால் எடுத்துப் பார்ப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது அறியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்தில் ஊடவியலாளர்கள் எவர்களும் ஒலி, ஒளி பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். செய்திகள் சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி உள்ளது.

பார்வையிடுபவர்கள் 15 பேராக உள்வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டப்பட்டுள்ளன. இன்றைய தினமும் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர் கள் இருவருடைய மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## இளைஞன் மர்ம மரணம்

பதுளை, ஓக. 03

பதுளை ஒஹிய - உடவேரியவத்தை பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

பிரதேச கிராம உத்தியோகத்தர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் உடவேரியவத்தையில் உள்ள ஒஹிய விகாரைக்கு அருகில் வசித்து வந்த 22 வயது இளைஞன் ஆவார்.

இவரது மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை, மேலும் ஹல்துமுல்ல மற்றும் பண்டாரவளை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## துப்பாக்கியுடன் இளைஞன் கைது!

அநுராதபுரம், ஓக. 03

அநுராதபுரம், வெலிகேபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தேகம பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகேபொல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வெலிகேபொல பகுதியை சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகேபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

### சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன்

## உத்தியோகபூர்வ அரச இல்லங்களிலிருந்து முன்னாள் ஜனாதிபதிகள் வெளியேறவேண்டும்

கொழும்பு, ஓக. 03

புதிய சட்டமூலத்தில் எவ்விடத்திலும் முன்னாள் ஜனாதிபதிகளின் ஒய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்வதாக குறிப்பிடப்படவில்லை. சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ அரச இல்லங்களில் இருந்து வெளியேற வேண்டும். அரச நிதியை முகாமைத்துவம் செய்வதற்காகவே சிறந்த நோக்கத்துடன் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சால் முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது சிறந்ததொரு வழிமுறை என்றே குறிப்பிட வேண்டும்.

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிகளின் உரித்துச் சட்டத்தின் 2 மற்றும் 3ஆம் உறுப்புரைகள் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் விதவையான மனைவிக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் இந்த சட்டமூலத்தின் ஊடாக மீளப்பெறப்படவுள்ளன.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் விதவையான மனைவியின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ வாகன வசதிகள் நீக்கப்படும்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் உயிரிழந்ததன் பின்னரும் அவருக்கு கிடைக்கப்பெற்ற ஒய்வூதிய கொடுப்பனவு அவரது மனைவிக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டிருக்குமாயின் அந்த உரித்தும் இந்த சட்டமூலத்தின் ஊடாக நீக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்தினை இரத்துச் செய்யும் வகையில் பிரசுரிக்கப்பட்ட சட்டமூலத்தை இலங்கைப் பிரஜைகள் எவரும் 14 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்.

வெளியிடப்பட்ட சட்டமூலம் அரசமைப்புடன் முரண்படும் என்று ஒருசிலர் குறிப்பிடுகின்றனர். 1978ஆம் ஆண்டு 36(2) பிரிவில் ஜனாதிபதியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு ஆகியன பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் ஒய்வூதிய கொடுப்பனவும் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

புதிய சட்டமூலத்தில் எவ்விடத்திலும் முன்னாள் ஜனாதிபதிகளின் ஒய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்வதாக குறிப்பிடப்படவில்லை.

1986ஆம் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள், வாகனங்கள் உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் மாத்திரமே இரத்துச் செய்யப்படவுள்ளன. ஆகவே இந்த சட்டம் 1978ஆம் ஆண்டு 36(2)ஆம் இலக்க சட்டத்துடன் முரண்படாது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி திறைச்சேரிக்கு பாரிய சுமையாக இருப்பதால் அதனை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தில் இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இரத்துச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ அரச இல்லங்களில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும். அத்துடன் அரச வாகனங்களை மீள கையளிக்க வேண்டும் - என்றார். (எ)

## கேம்பிறிஜ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சி.சபேசன் கலாசாலையில் உரை



யாழ்ப்பாணம், ஓக. 03

கேம்பிறிஜ் பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆராய்ச்சியாளருமாகிய கலாநிதி சிதம்பரநாதன் சபேசன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகை தந்து கலாசாலை சமூகத்தினருக்கு ஊக்குவிப்பு உரை ஆற்றினார்.

இந்நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக கைக்கொள்ள வேண்டிய நான்கு விடயங்கள் என்ற தொனிப்பொருளில் அவரது உரை அமைந்திருந்தது.

உரை நிகழ்வை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இ.செந்தூர்ச்செல்வன் முன்னிலைப்படுத்தினார். பிரதி அதிபர் க.செந்தில்குமரன் நன்றி உரை ஆற்றினார்.

கலாநிதி சிதம்பரநாதன் சபேசன் புலோப்பளையை பிறப்பிடமாக்க் கொண்டவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றில் பயின்று கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி பொறியியல் கல்வியை மேற்கொண்டு அங்கு விரிவுரையாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் செயற்படுகின்றார்.

மின் காந்த அலைகளை கையாண்டு பொருட்களை பின்தொடர்ந்து கண்டறியும் பொறிமுறையை அவர் கண்டுபிடித்தமைக்காக பிரித்தானியாவின் முடிக்குரிய அரசரால் பாராட்டப் பெற்றவர் என்பது குறிப்பிடதக்கது. (அ)



## 'ஈழத்து அரங்க ஆளுமைகள் 100' நூல் வெளியீட்டுநிகழ்வு கனடாவில்

மார்க்கம், ஓக. 03

வாசகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் வாழ்வியல் எழுத்தாளர் என மதிப்புப் பெற்றுள்ள ப. ஸ்ரீஸ்கந்தனின் ஷஈழத்து அரங்க ஆளுமைகள் 100; நூல் வெளியீட்டு விழா கனடாவில் மார்க்கம் மிலிக்கன் மில்ஸ் மண்டபத்தில் அடக்கமான நிகழ்வாக இடம்பெற்றது. துஷி ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற விழாவில், கல்வியாளரும் படைப்பாளியுமான பொன்னையா விவேகானந்தன் நூலினை ஆய்வுரை செய்தார். ஆளுமைகள் சார்பாக ஒலிபரப்பு - ஒளிபரப்பு ஊடகர் பி. விக்னேஸ்வரன் உரையாற்றினார். "ஆவணப்படுத்தல் : அறிமுகமும் அரசியலும்" என்ற தலைப்பில் அருண் மொழிவர்மனின் சிறப்புரை இடம்பெற்றது. நூலாசிரியர் ப. ஸ்ரீஸ்கந்தனின் ஏற்புரையை அடுத்து நூலின் பிரதிகள் வருகை தந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஈழத்தின் நாடக மற்றும் இசைத்துறை கலைஞர்கள் என்ற வகையில் நூறு ஆளுமைகள் பற்றி முதன்முதலாக வெளிவந்த நூலாக இது மதிப்புப் பெற்றுள்ளது. சுமார் நானூறுக்கும் அதிகமான பக்கங்களுடன் வெளிவந்த இந்நூலில் மறைந்த பல கலைஞர்கள் நினைவுகூரப்பட்டிருக்கிறார்கள். நல்லதொரு நாடகக் கலைஞரான ஸ்ரீஸ்கந்தன் நூறாண்டுகளைக் கடந்து இடம்பெறும் அரியாலை சுதேசிய விழாவின் கலைக்குழு பொறுப்பாளராக பல ஆண்டுகள் தொடர்ந்து பங்காற்றி வருபவர். தூரத்தே ஒரு (நாடகங்கள்), யாழ்ப்பாணம் 1994 (பயணக் கட்டுரைகள்), மனசுலாவிய வானம் (அனுபவக் கட்டுரைகள்), அரியாலையூர் நாடக ஆளுமைகள் இவரால் ஏற்கனவே வெளியிடப்பட்ட நூல்கள். ஈழத்தின் மூத்த நாடகக் கலைஞரான குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பு நாடகங்கள் உட்பட வேறுசில நூல்களையும் இவர் பதிப்பித்துள்ளார். (அ)

## சைவம் தழைத்தோங்க நிகழ்வு நல்லூரில்





யாழ்ப்பாணம், ஓக. 03

ஓம் தொலைக்காட்சி நடத்தி வருகின்ற சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சி நல்லூர் வீதியில் வடகிழக்கிலுள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் 04 ஆவது நாளாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது

நிகழ்வில் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் சாரங்கள் இசைமன்ற மாணவி இறை வணக்கம் இசைத்தார்

கிழக்கிலங்கை கல்முனை சிவா நடன கலாசாலை மாணவியர் பக்கவாத்திய சகிதம் நடன ஆற்றுகை மேற்கொண்டனர்

மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியை கவிதா வாமதேவன் , நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலய ஆசிரியை சிவசக்தி ஜெயகாந்தன் ஆகியோரை நடுவராக கொண்டு செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் நடத்திவருகின்ற சைவக்களஞ்சியம் வினாடி வினா போட்டி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. போட்டி யில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவெற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவெற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org